بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْد

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 8

இதழ் 35

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்தூர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரி 1445 - ஸஃபர்- 13★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1402 - ஸஹுர் 31 ★ 31 ஆகஸ்ட் 2023

## அல்லாஹ்வின் கட்டளை

وَالَّذِيْنَ اٰمَنُوْا بِاللّٰهِ وَرُسُلِهٖ وَلَمْ يُفَرِّقُوْا بَيْنَ اَحَدٍ مِّنْهُمْ اُولٰٓئِكَ سَوْفَ يُؤْتِيْهِمْ اُجُوْرَهُمْ ۗ وَكَانَ اللّٰهُ غَفُوْرًا رَّحِيْمًا

**பொருள்**

அல்லாஹ்விடத்தும் அவனுடைய தூதர்களிடத்தும் நம்பிக்கை கொண்டு (தூதர்களாகிய) அவர்களுள் எவருக்கிடையிலும் வேற்றுமை பாராட்டாதவர்களுக்கு, அவர்களின் நற்பலன்களை விரைவிலேயே அவன் வழங்குவான். அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும், மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான். (அந்நிஸா: 153)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**இறந்தவர்களிடம் உதவி வேண்டும்படி இறைவன் எங்கும் குறிப்பிடவில்லை.**

**இறைவனை அடைய வேண்டும்; உயிருள்ள மற்றும் என்றென்றும் நிலைத்திருக்கும் இறைவனை அடைய வேண்டும் என்று எவர் விரும்புகின்றாரோ அவர் உயிருள்ளவர்களை தேடட்டும். ஏனெனில் நமது இறைவன் உயிருள்ள இறைவனே தவிர மரணித்தவன் அல்லன்.**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

### இறந்தவர்களிடம் சென்று உதவி வேண்டுவது தடுக்கப்பட்டுள்ளது

எனது இந்த அனைத்து சொற்பொழிவின் சுருக்கம் என்னவென்றால், இறந்தவர்களிடம் சென்று உதவி வேண்டும் படி இறைவன் எங்கேயும் குறிப்பிடவில்லை. மாறாக, உயிருள்ளவர்களைப் பற்றியே இறைவன் கூறியுள்ளான். இறைவன் இஸ்லாத்தை உயிருள்ளவர்களிடம் ஒப்படைத்து மாபெரும் அருள் புரிந்துள்ளான். இஸ்லாத்தை மரணித்தவர்களிடம் ஒப்படைத்திருந்தால் பின்னர் எவ்வளவு பேரழிவு வந்திருக்கும் என்பது தெரியாது! இறந்தவர்களின் மண்ணறைகள் குறைவாக எங்கே இருக்கின்றன? முல்தான் (எனும் ஊரில்) மண்ணறைகள் குறைவாகவா இருக்கின்றன? நானும் ஒருமுறை முல்தானிற்கு சென்றிருந்தேன்.ஒரு மண்ணறையை பார்க்க எங்கு சென்றாலும் உதவியாளர்கள் பணத்திற்காக ஒரு மனிதனைச் சூழ்ந்து கொண்டார்கள். பாக்பட்டன் எனும் ஊரில் இறந்தவர்களின் பெயரில் என்னென்ன நடக்கின்றது என்று பாருங்கள்! அஜ்மீரில் சென்று பாருங்கள். பித்அத்கள் மற்றும் முஹத்திஸத்துகளின் கடை வீதி பரபரப்பாக உள்ளது. சுருக்கமாக கூறினால், இறந்தவர்களை பார்த்தீர்கள் என்றால் நீங்கள் இந்த முடிவிற்கு வருவீர்கள். அதாவது, சடங்கு சம்பிரதாயங்கள் மற்றும் தடுக்கப்பட்ட நடைமுறைகளைத் தவிர வேறு எதனையும் காண முடியாது. அல்லாஹ் நமக்கு வகுத்துள்ள நேர்வழி (ஸிராத்தே முஸ்தகீம்) என்பது உயிருள்ளவர்களின் வழியே தவிர, உயிரற்றவர்களின் வழி அல்ல. எனவே எவர் இறைவனை அடைய வேண்டும் என்றும், உயிருள்ள மற்றும் என்றென்றும் நிலைத்திருக்கும் இறைவனை அடைய வேண்டும் என்று விரும்புகின்றாரோ அவர் உயிருள்ளவர்களை தேடிச் செல்லட்டும். ஏனெனில் நமது இறைவன் உயிருள்ள இறைவனேயன்றி உயிரற்ற இறைவன் அல்லன். எவர்களின் வேதம் மரணித்ததாக உள்ளதோ அவர்கள் மரணித்தவர்களிடம் இருந்து

இதன் தொடர்ச்சி : 8ம் பக்கம்

**தொழுகை என்பது உங்களின் இறைவனுடனான சந்திப்பு ஆகும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். மேலும், இறைவனுடனான சந்திப்பு என்பது ஓர் அருட்கொடையாகும். எந்த அறிவு படைத்த மனிதனும் தனது அன்பருடனான சந்திப்பை சுமையாக கருத மாட்டான்.**

وَمِنَ الَّيْلِ فَتَهَجَّدْ بِهٖ نَافِلَةً لَّكَ ۖ عَسٰٓى اَنْ يَّبْعَثَكَ رَبُّكَ مَقَامًا مَّحْمُوْدًا

(பனீ இஸ்ராயீல்: 80)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்தின் விளக்கவுரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்: فَتَهَجَّدْ بِهٖ என்பதில் بِهٖ என்ற ஸமீர் (சுட்டுச் சொல்) திருக்குர்ஆனைக் குறிக்கின்றது. அதன் பொருள் என்னவென்றால், இந்தத் தொழுகையில் திருக்குர்ஆன் ஓதுவதில் சிறப்பான அழுத்தம் இருக்க வேண்டும்.

தஹஜ்ஜுத் என்பதன் பொருள் தூங்கி எழுவது ஆகும். எனவே தஹஜ்ஜுத் தொழுகைக்கு முதலில் தூங்குவது அவசியம் ஆகும். எந்த மக்கள் இரவு முழுவதும் கண் விழித்திருக்கும் சடங்கை மேற்கொள்கின்றனரோ அவர்கள் இறை வணக்கம் செய்வதில்லை. அவர்கள் ஷரீஅத்தின் நோக்கத்தை பொய்ப்படுத்துகின்றனர். அதுபோன்ற இறை வணக்கங்கள் திருக்குர்ஆனின் விருப்பத்திற்கு எதிரானது ஆகும். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் எப்போதும் இரவின் முதல் பகுதியில் உறங்கி வந்தார்கள். மேலும் இரவின் இறுதிப் பகுதியில் எழுந்து தஹஜ்ஜுத் தொழுது வந்தார்கள்.

இறை வணக்கத்திற்கான சந்தர்ப்பம் கொடுப்பது இறைவனின் ஒரு கருணையாகும் என்று இந்த வசனத்தில் அல்லாஹ் கூறியுள்ளான். ஆனால், தொழுகையை சுமையாக கருதுகின்ற அந்த மக்களின் மீது பரிதாபமே! தொழுகை என்பது உங்களின் இறைவனுடனான சந்திப்பு

இதன் தொடர்ச்சி : 8ம் பக்கம்

## நபிமொழி

கூட்டுத் தொழுகையின் முக்கியத்துவம்

(2420) : ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: தொழுவதற்கான கட்டளையை நான் வழங்கி, பின்னர் அவர்கள் (தொழத்) துவங்கிவிட வேண்டும் ; அதன் பிறகு, (கூட்டுத்) தொழுகைக்கு வருகை தராத மக்களின் வீடுகளுக்கு நான் செல்ல வேண்டும்; மேலும் அவர்கள் உள்ளே இருக்கும்போது, நான் வெளியில் இருந்து அவர்களின் வீடுகளை எரித்து விட வேண்டும் என்று நான் எண்ணம் கொண்டேன்.

(ஸஹீஹ் புகாரி, கிதாபுல் குஸூமாத், காதியான் பதிப்பு - 2008-ம் ஆண்டு )

## இந்த இதழில்

அல்லாஹ்வின் கட்டளை

நபி மொழி

மல்ஃபூஸாத்

தப்ஸீர் கபீர்

ஸய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 28.7.23 அன்று ஆற்றிய முழுமையான குத்பா பேருரை

ஸய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 14.7.23 அன்று ஆற்றிய குத்பா பேருரையின் நிறைவுப் பகுதி

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஆண்டு மாநாட்டில் பணியாற்றும் ஊழியர்கள் மற்றும் கலந்து கொள்ளும் விருந்தினர்களுக்கு பொன்னான அறிவுரைகள்**

**ஓர் இடைவெளிக்குப் பிறகு மிகவும் பரந்துபட்ட அளவில் ஜல்ஸா நடைபெற இருக்கிறதே; மேலும், எங்காவது ஏதாவது நிர்வாக குறைபாடுகள் ஏற்பட்டு விடக் கூடாதே என்ற இந்த கவலை உள்ளது. அல்லாஹ் இந்த கவலையை, நிர்வாகத்தின் இந்த கவலைகளை அகற்றி விடுவான்.இன்ஷாஅல்லாஹ்.**

**நமது ஊழியர்கள் தமது ஏற்பாடுகளை மிகவும் அழகிய முறையில் நிர்வகித்து விடுவார்கள் என்று நான் அல்லாஹ்வின் அருளால் நம்பிக்கை வைத்துள்ளேன்**

**நமது பணிகள் நமது எந்த புத்திசாலித்தனத்தினாலோ அல்லது அனுபவத்தினாலோ நடைபெறுவது இல்லை. மாறாக, அல்லாஹ்வின் அருளினாலேயே நடைபெறுகின்றன.**

**எந்த உணர்வுடன் அனைவரும் உங்களை நீங்கள் தொண்டிற்காக முன் நிறுத்தி உள்ளீர்களோ அந்த உணர்வை நிலைநாட்டியவாறு எத்தனை நாட்கள் டியூட்டிகள் இருந்தாலும் அவற்றை நிறைவேற்றுங்கள். எங்கு விருந்தினர்களின் தொண்டுகளுக்கான உரிமையை செலத்துவீர்களோ அங்கு அல்லாஹ்வை வணங்குவதற்கான உரிமையையும் செலுத்துங்கள்**

**நல்லொழுக்கம் இல்லையென்றால் பின்னர் எதுவுமே இல்லை.**

**ஊழியர்களின் அழகிய ஒழுக்கத்தால் மட்டும் சுற்றுப்புறத்தில் அமைதி நிலைபெற முடியாது. மாறாக, மாநாட்டில் கலந்து கொண்டுள்ள அனைவருமே அழகிய ஒழுக்கத்தை வெளிப்படுத்த வேண்டும். பெண்களும் இந்த விஷயத்தை கருத்தில் கொள்ள வேண்டும்.**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 28 ஜுலை 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **வஃபா** மாதம் **28 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ

وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ○

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○

صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

இங்கு கிலாஃபத் வந்து விட்ட நிலையில் ஜல்ஸா ஸாலானா நடந்து வருவது அல்லாஹ்வின் அருளால் தற்போது நாற்பது ஆண்டுகள் கடந்து விட்டன. துவக்கத்தில் விசாலமான ஏற்பாடுகளின் காரணமாக இங்குள்ள ஜமாஅத்திற்கு நிறைய கற்க வேண்டியதற்கான தேவை இருந்தது. அதற்கு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் தனிப்பட்ட ஆர்வத்துடனும் வழிகாட்டல் வழங்கினார்கள். மேலும், ரப்வாவிலிருந்தும் அனுபவம் வாய்ந்த மக்களை இங்கு அழைத்து வந்து வேலைகளை கற்றுக் கொடுத்தார்கள். அவர்களில் ஜல்ஸா ஸாலானா அதிகாரி சவ்த்ரி ஹமீதுல்லாஹ் ஸாஹிப் அவர்களும் (ஒருவராக) இருந்தார்கள். அன்னார் மிகவும் உதவி செய்தார்கள்.

1985-ல் இங்கு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் முன்னிலையில் முதல் ஜல்ஸா நடைபெற்றது. அதற்கு முன்னர் ஒரு ஜல்ஸா 1984-ல் நடைபெற்றது. ஆனால், மிகவும் சிறிய அளவிலானதாக இருந்தது. 1985-ல் தான் முறையாக ஜல்ஸா நடைபெற்றது. அதில் அநேகமாக ஐந்தாயிரம் மக்கள் கலந்து கொண்டார்கள். மேலும், அதற்கும் கூட நிர்வாகத்தினருக்கு மிகுந்த கவலை இருந்தது. எவ்வாறு (மாநாட்டுப் பணிகளை) நிர்வகிப்பது? என்று ஒவ்வொருவரும் கவலைக்குள்ளாகி இருந்தனர். தற்போது அல்லாஹ்வின் அருளால் யூ.கே குத்தாமுல் அஹ்மதிய்யா அல்லது லஜ்னா இமாயில்லாஹ்வின் இஜ்திமாவில் மட்டுமே அதை விட அதிகமான எண்ணிக்கையில் மக்கள் கலந்து கொள்கின்றனர். மேலும், மிகவும் அழகிய முறையில் இந்த கிளை அமைப்புகளே தமது ஏற்பாடுகளை நிர்வகித்துக் கொள்கின்றன. எனவே இந்த அடிப்படையில் ஏற்பாடுகளை நிர்வகித்துக் கொள்வதற்கான நிறைய அனுபவத்தை யூ.கே ஜமாஅத் பெற்று கொண்டு விட்டது.

இந்த வருடம் மூன்று நான்கு ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு முழுமையான முறையில் பரந்துபட்ட அளவில் ஜல்ஸா நடைபெறுவதால் நாற்பதாயிரத்திற்கும் அதிகமாக எதிர்பார்க்கப்படும் விருந்தினர்களை அழகிய முறையில் நிர்வகிக்க முடியுமா? முடியாதா? என்ற கவலை மீண்டும் நிர்வாகத்திற்கு ஏற்பட்டுள்ளது. ஆனால், நமது ஊழியர்கள் தமது ஏற்பாடுகளை மிகவும் அழகிய முறையில் நிர்வகித்து விடுவார்கள் என்று நான் அல்லாஹ்வின் அருளால் நம்பிக்கை வைத்துள்ளேன். மாஷாஅல்லாஹ் தற்போது இங்கு வசிக்கக் கூடிய மக்கள், இன்னும் கூறப்போனால் இங்கு பிறக்கக் கூடிய இங்கு வளர்ந்து பெரியவர்களாகி வரும் பிள்ளைகள் இருக்கின்றனர். அவர்கள் தற்போது இளைஞர்களாகி விட்டனர்; அல்லது இவர்கள் சுய சிந்தனையுடன் பணிகளை செய்யக் கூடிய வயதை அடைந்து விட்டனர். இவர்கள் தமது பணிகளை அழகிய முறையில் நிர்வகிக்கக் கூடிய அளவிற்கு அனுபவம் வாய்ந்தவர்களாக ஆகிவிட்டனர்.

தற்போது வரை செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளையும் கடந்த ஞாயிற்றுக் கிழமை நான் ஆய்வு செய்தேன். மேலும் அல்லாஹ்வின் அருளால் ஒவ்வோர் இடத்திலும், ஒவ்வொரு துறையிலும் ஊழியர்களை மிகவும் சுறுசுறுப்பு மிக்கவர்களாகவும், தமது பணியை அறியக் கூடியவர்களாகவும், நான் கண்டேன். (முன்னதாக) இருந்து வந்த கவலைகள் அல்லாஹ்வின் அருளால் நீங்கிவிட்டன. ஓர் இடைவெளிக்குப் பிறகு மிகவும் பரந்துபட்ட அளவில் ஜல்ஸா நடைபெற இருக்கிறதே; மேலும், எங்காவது ஏதாவது நிர்வாக குறைபாடுகள் ஏற்பட்டு விடக் கூடாதே என்ற இந்த கவலை உள்ளது. அல்லாஹ் இந்த கவலையை, நிர்வாகத்தின் இந்த கவலைகளை அகற்றி விடுவான்.இன்ஷாஅல்லாஹ். நிபந்தனை என்னவென்றால், நாம் அல்லாஹ்வின் அருட்களை ஈர்ப்பதன் பக்கம் எல்லா நேரமும் கவனமுடையவர்களாக இருக்க வேண்டும். நமது பணிகள் நமது எந்த புத்திசாலித்தனத்தினாலோ அல்லது அனுபவத்தினாலோ நடைபெறுவது இல்லை. மாறாக, அல்லாஹ்வின் அருளினாலேயே நடைபெறுகின்றன.

கடந்த குத்பாவில் இதற்காக ஊழியர்களிடம் சுருக்கமாக நான் இதனையும் கூறியிருந்தேன். அதாவது, அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்களின் போதனையின் படி அமல் செய்தவாறு உழைப்பு, உயர் நல்லொழுக்கம் மற்றும் துஆக்களுடன் அல்லாஹ்விடம் உதவி வேண்டியவாறு ஒவ்வொரு ஊழியரும், ஒவ்வொரு பொறுப்பாளரும், தமது பணியை செய்ய வேண்டும். இது நிகழ்ந்தால் பின்னர் அல்லாஹ்வும் அருட்களை வழங்குவான். முற்றிலும் மார்க்க நோக்கத்திற்காக ஒன்று கூடியுள்ள ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தாளிகளுக்கு தொண்டாற்றுவதற்காக தன்னலமற்றவர்களாக திகழ்ந்து நம்மை நாமே நாம் முன் நிறுத்தியுள்ளோம். எனவே நான் மீண்டும் ஊழியர்களிடம் கூறுகின்றேன்: எந்த உணர்வுடன் அனைவரும் உங்களை நீங்கள் தொண்டிற்காக முன் நிறுத்தி உள்ளீர்களோ அந்த உணர்வை நிலைநாட்டியவாறு எத்தனை நாட்கள் டியூட்டிகள் இருந்தாலும் அவற்றை நிறைவேற்றுங்கள். எங்கு விருந்தினர்களின் தொண்டுகளுக்கான

உரிமையை செலுத்துவீர்களோ அங்கு இதனையும் மறந்து விடாதீர்கள். அதாவது, நாம் அல்லாஹ்வை வணாங்குவதற்கான உரிமையையும் செலுத்த வேண்டும்; நமது தொழுகைகளையும் பாதுகாக்க வேண்டும்; மேலும், இந்த சூழலின் ஒவ்வொரு நொடியிலிருந்தும் பயனடைந்தவாறு உங்களது இருப்பையும் தூய்மையானதாக ஆக்கிக் கொள்வதற்காக முயற்சி செய்ய வேண்டும்.

வெறும் டியூட்டிகளின் கடமைகளை நிறைவேற்றி விட்டு நாம் நமது நோக்கத்தை நிறைவேற்றி விட்டோம் என்று நீங்கள் புரிந்து கொள்ளக் கூடாது. இறை வணக்கம் இல்லாமல் நமது நோக்கம் முழுமையடைய முடியாது. எனவே டியூட்டி கொடுக்கக் கூடிய பிள்ளைகளும், இளைஞர்களும், பெண்களும் இந்த உரிமையை நிறைவேற்றுவதையும் கருத்தில் கொள்ளுங்கள்.

இதன் பிறகு இன்று ஜல்ஸாவில் வருகை தந்துள்ள விருந்தினர்களுக்கும் நான் சில விஷயங்களை கூற விரும்புவேன்: ஜல்ஸாவில் கலந்து கொண்டுள்ள ஒவ்வொரு நபரும் இந்த விஷயத்தை எப்போதும் கருத்தில் கொள்ள வேண்டும். நான் கூறப்போகும் இந்த விஷயங்களை நான் சடங்கு சம்பிரதாயமாக கூறிக் கொண்டிருக்கின்றேன்; நான் கூறிவிட்டேன்; நீங்களும் கேட்டு விட்டீர்கள்; எனவே இதுபோதுமானதாகும் என்று கருதாதீர்கள். கூடாது! மாறாக, நீங்கள் அதன்படி செயல்பட வேண்டிய அவசியம் உள்ளது.

எல்லாவற்றையும் விட முதன்மையான மற்றும், முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் இதுவாகும். அதாவது இந்த ஜல்ஸா ஒன்றும் உலகியல் திருவிழா கிடையாது என்ற இந்த விஷயத்தை எப்போதும் நினைவிற்கொள்ளுங்கள். (ஷஹாதத்துல் குர்ஆன், ரூஹானீ கஸாயீன், தொகுதி 6, பக்கம் 395)

இந்த ஜல்ஸாவில் கலந்து கொள்வதற்கு நமக்கு ஒரு நோக்கம் உள்ளது. மேலும், அந்த நோக்கம் தமது ஆன்மிக மற்றும் அறிவார்ந்த நிலைகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதாகும்.

எனவே இந்த எண்ணம் இருக்கும்போது பின்னர் உலகியல் விஷயங்களின் பக்கம் கவனம் இருக்காது. மேலும், உலகியல் விஷயங்களின் பக்கம் கவனம் இருக்காதபோது பின்னர் ஜல்ஸாவின் சில ஏற்பாடுகளில் ஒருவேளை சில குறைபாடுகள் இருந்தாலும் அந்நிலையில் விருந்தினர் அதனை உணர மாட்டார். மேலும், விருந்து உபசரிப்பு செய்பவர்களின் புறமிருந்து அல்லது ஜல்ஸாவின் ஏற்பாட்டாளர்கள் புறமிருந்து சில குறைபாடுகள் ஏற்பட்டாலும் கூட எங்களுக்கு அதனால் எந்த வித்தியாசமும் ஏற்படாது; எங்களது ஆன்மிக மற்றும் அறிவார்ந்த நிலைகளை நாங்கள் மேம்படுத்திக் கொள்ள வேண்டும்; மேலும் ஜல்ஸாவின் நிகழ்ச்சிகள் மற்றும் சொற்பொழிவுகளிலிருந்து பயன்பெற்று அதனை செய்து கொள்ள முடியும் என்ற எண்ணமே அவர்கள் கொண்டிருப்பார்கள்.

ஆக, முதல் விஷயம் இதுவாகும். அதாவது, வருகை தரும் ஒவ்வொருவரும், ஜல்ஸாவில் கலந்து கொள்ளக் கூடிய ஒவ்வொருவரும் இந்த விஷயத்தை உறுதி செய்ய வேண்டும். அதாவது, நாம் ஜல்ஸாவின் நேரங்களில் இங்கும் அங்கும் சுற்றுவதற்கு பகரமாக ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளை கேட்க வேண்டும்; மேலும் ஜல்ஸாவின் முறையான நிகழ்ச்சிகளுக்கு இடையில் உணவிற்கும் தொழுகைக்கும் அல்லது நண்பர்களை சந்திப்பதற்கும் கிடைக்கின்ற அவகாசத்தையும் கூட சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை உறுதி செய்ய வேண்டும். அதிலும் ஓய்வு நேரம் கிடைக்கின்றது என்றால் பின்னர் கடை வீதியில் பொருட்களை வாங்குவதற்காக மட்டும் சுற்றாதீர்கள். மாறாக, வெளியீட்டுத் துறையின் சார்பாக இங்கு ஜமாஅத் புக் ஸ்டால்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதற்கு செல்லுங்கள். அதேபோன்று பல்வேறு தலைமையக துறைகள் இருக்கின்றன. உதாரணமாக, மக்ஸனே தஸாவீர்துறை உள்ளது. ரீவ்யூவ் ஆஃப் ரிலிஜன்ஸ் துறை உள்ளது. தப்லீஃக் துறைக்கான கூடாரம் போன்றவை உள்ளன. கண்காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றை பாருங்கள். மேலும் உங்களது மார்க்க மற்றும் வரலாற்று அறிவையும் அதிகப்படுத்திக் கொள்ளுங்கள்.

சுருக்கம் என்னவென்றால், எல்லா ரீதியிலும் உலகியல் பற்று நிறைந்த அனைத்து விஷயங்களிலிருந்தும் விலகி முற்றிலும் மார்க்க அறிவையும், அறிவார்ந்த விஷயங்களையும் மேம்படுத்திக் கொள்வதற்கான ஏற்பாட்டை செய்வதற்கு முயற்சி செய்யுங்கள். மேலும், இது நடைபெறும் போதுதான் பின்னர் பரஸ்பர நேசம் மற்றும் தொடர்பிலும் முன்னேற்றம் எற்படும். மேலும், நிர்வாகத்திலும், விருந்து உபசரிப்பு செய்பவர்களிடமும் ஒருவேளை ஏற்பாடுகளில் குறைபாடுகள் இருந்தாலும் கூட பின்னர் அது தென்படாது. மேலும், அந்நிலையில் உண்மையான நம்பிக்கையாளர்களின் சூழலின் சித்திரத்தை பிரதிபலிக்கும் அன்பு நிறைந்த சூழலாகவும் இருக்கும். இந்த நிலை இல்லை என்றால், பின்னர் ஜல்ஸாவின் நோக்கமான அந்த சூழலை நம்மால் ஜல்ஸாவில் உருவாக்க முடியாது. பலவீனங்களை தேடத் துவங்கிவிட்டால் மேலும், முறையீடுகள் செய்யத் துவங்கி விட்டால் பின்னர் இவ்வளவு பெரிய மற்றும் தற்காலிக ஏற்பாட்டில் பல டஜன் கணக்கில் முறையீடுகள் உருவாகக் கூடும். முழுமை என்பது இருக்கவே முடியாது. ஏராளமான பலவீனங்கள் தென்படக் கூடும். அவை இயல்பில் நிம்மதியின்மையை உருவாக்கக் கூடியதாகும். உதாரணமாக, உணவு வழாங்குவதற்கான ஏற்பாட்டையே எடுத்துக் கொள்ளுங்கள். அதில் விருந்தினர்களுக்கு உணவு பரிமாறுவதற்காக எல்லா வகையான வசதிகளையும் ஏற்படுத்தி கொடுக்க வேண்டும் என்றே பொதுவாக முயற்சி செய்யப்படுகின்றது. குழம்பு போன்றவை குறைவாக இருக்கக் கூடாது; மேலும் உணவு பரிமாறக் கூடிய ஊழியர்கள் சரியான முறையில் உயர் நல்லொழுக்கங்களை வெளிப்படுத்தியவாறு தொண்டாற்ற வேண்டும் என்றே முயற்சி செய்யப்படுகின்றது. எனினும், சில முறை அனுமானத்தில் கூடுதல் குறைவு ஏற்பட்டு விடுகின்றது. மேலும், சரியான முறையில் உணவிற்கு ஏற்பாடு செய்ய முடியாமல் போய் விடுகின்றது. எனவே, அதனால் எந்த வகையிலும் கோபத்தை வெளிப்படுத்துவதற்கு பகரமாக மனமகிழ்ச்சியுடன் ஊழியர்களின் வருத்தத்தை ஏற்றுக் கொண்டு விட வேண்டும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அதுபோன்ற நிலைமைகள் வரும்போது நமக்கு முன்னால் எப்படிப்பட்ட முன்மாதிரியை வெளிப்படுத்தியுள்ளார்கள் என்பது தொடர்பாக அன்னாரின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து ஒரு சம்பவத்தை எடுத்துரைக்கின்றேன்: இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒருமுறை பயணத்தில் இருந்தார்கள். பணியில் மும்முரமாக இருந்தார்கள். அதன் காரணமாக இரவு உணவு பரிமாறப்பட்டுக் கொண்டிருந்தபோது, மற்ற விருந்தினர்களுக்கு உணவு கொடுக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது அன்னார்(அலை) இரவு உணவை உண்ணவில்லை. ஊழியர்கள் உணவை வைத்திருப்பார்கள். ஆனால், பின்னர் சிறிது நேரம் கழித்து உணவு உண்ணப்பட்டதா? இல்லையா? என்பதை கவனிக்காமல் அதை எடுத்துக் கொண்டு சென்றிருப்பர். அன்னார் (அலை) உணவு அருந்தவில்லை : மேலும் அன்னார் தமது பணிகளில் மும்முரமாக இருக்கின்றார்கள் என்பதன் பக்கம் ஏற்பாட்டாளர்களும் கவனம் செலுத்தவில்லை.

எவ்வாறு இருப்பினும், இரவில் வெகு நேரம் கழித்து அன்னாருக்கு பசி உணர்வு ஏற்பட்டபோது அன்னார் (அலை) உணவு குறித்து கேட்டார்கள். அப்போது ஏற்பாட்டாளர்கள் அனைவருக்கும் கைகால் ஓடவில்லை. இருந்த உணவை அங்கு வந்திருந்த மக்கள், பணியாளர்கள் என அனைவரும் உண்டு விட்டனரே; தற்போது எதுவும் எஞ்சவில்லையே! என்று அவர்கள் மிகவும் பதற்றமடைந்தனர். ஏதாவது ஹோட்டலில் இருந்து உணவு வாங்கி வரலாம் என்றால் இரவும் நீண்டதாகவிட்டது; கடை வீதியும் அடைக்கப்பட்டு இருந்தது. எனவே அதுவும் முடியாமல் போனது.

எவ்வாறு இருப்பினும், உணவு தீர்ந்து விட்டது; மேலும் உடனடியாக வேகவேகமாக உணவு சமைப்பதற்கான ஏற்பாட்டை செய்வதற்கு ஏற்பாட்டாளர்கள் பதற்றமடைந்துள்ளார்கள் என்ற தகவல் எப்படியோ ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு தெரிய வந்தது. அப்போது, அன்னார் (அலை) கூறினார்கள்: பதற்றமடைவதற்கு அவசியம் இல்லை. பாருங்கள்! உணவு மேசையில் எஞ்சிய ரொட்டித் துண்டுகள் இருக்கும்; அவற்றை எடுத்துக் கொண்டு வாருங்கள்.

ஆக, அன்னார் (அலை) அந்த ரொட்டித் துண்டுகளிலிருந்தே சிறிய பகுதியை உண்டார்கள். மேலும் ஏற்பாட்டாளர்களையும் சமாதானப்படுத்தினார்கள்.

அறிவிப்பு செய்கின்றவர் கூறுகின்றார்: ஹுஸூர் (அலை) அந்நேரத்தில் உணவு சமைக்கும்படி கட்டளை வழங்கியிருந்தால் பின்னர் அது எங்களின் கண்ணியத்திற்கு காரணியாக இருந்திருக்கும். மேலும், தொண்டாற்றுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்று நாங்கள் அந்த விஷயத்தில் பெருமிதம் கொண்டிருப்போம். மேலும் அதில்தான் அருளும் உள்ளது. ஆனால், அன்னார் (அலை) எங்களது கஷ்டத்தை உணர்ந்தவாறு (இந்த நேரத்தில் உணவு சமைக்க) எந்த அவசியமும் இல்லை என்று கூறியவாறு தடுத்து விட்டார்கள். (யாகூப் அலீ இர்ஃபானீ ஸாஹிப் அவர்களின் நூல் - ஸீரத் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், பக்கம் 322,

பதிப்பு 2016-ம் ஆண்டு)

நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் உணவு உண்பதற்கு சென்றடையவில்லை என்றால் பின்னர் எந்த வீண் பெருமையும் பேசக் கூடாது. எது கிடைக்குமோ அதனை சாப்பிட்டுக் கொள்ள வேண்டும். சிலமுறை கறிக் குழம்பு தீர்ந்துவிடுகின்றது. எனவே உடனடியாக பருப்பு சமைக்கப்பட்டுவிடுகின்றது. ஏனெனில், எந்த ஒரு விருந்தாளியும் பசியோடு இருக்கக் கூடாது என்பதற்காக அது எளிதாகவும், விரைவாகவும் சமைக்கப்படுகின்றது. எனவே விருந்தினர்களும் மனமகிழ்ச்சியுடன் அதனை சாப்பிட்டுக் கொள்ள வேண்டும். அதேபோன்று ரொட்டியை வீணாக்கக் கூடாது என்ற இந்த படிப்பினையையும் (இந்த சம்பவத்தில்) ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வழங்கியுள்ளார்கள்: மக்கள் ரொட்டித் துண்டுகளை விட்டு விட்டு செல்வார்கள் என்பதை அன்னார் (அலை) அறிந்திருந்தார்கள். எனவேதான் அன்னார் (அலை) அதனை எடுத்து வாருங்கள்; நான் உண்டு கொள்வேன் என்று கூறினார்கள்.

எனவே இங்கும் நான் விருந்தினர்களிடம் இதனை கூறுவேன்: அதாவது, ரொட்டியை நன்றாக சுட வேண்டும் என்பதே ரொட்டி சுடுபவர்களின் முயற்சியாக இருக்கின்றது. ஆனால், சிலமுறை ஒருபகுதி வேகாமல் இருந்து விடுகின்றது; அல்லது கரிந்து விடுகின்றது. ஆக, அதுபோன்ற உச்சபட்ச நிலையில் அதனை விட்டுவிடலாம். ஆனால், பொதுவாக அவ்வாறு செய்யக் கூடாது. ஒருவேளை சிறிதளவு கூடுதல் குறைவு இருந்தாலும் கூட பின்னரும் ரொட்டியை வீணாக்கக் கூடாது. ரொட்டி பிளான்ட் இங்கு இருக்கின்றது. பெரும் நேரத்தை செலவிட்டு, பெரும் உழைப்புடன் ஊழியர்கள் பணி செய்து கொண்டிருக்கின்றனர். மேலும், ஒவ்வொரு ஆண்டும் பணியை மேம்படுத்துவதற்காக ஏதாவது புதிய சிறப்புகளையும் மேற்கொள்கின்றனர். இந்த விஷயத்தையும் விருந்தினர்கள் நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது, இவ்வாறு உணவு சமைக்கக் கூடியவர்களும், ரொட்டி சுடுபவர்களும் அந்தத் தொழிலை செய்பவர்கள் ஒன்றும் கிடையாது. இன்னும் கூறப்போனல், அவர்கள் தன்னார்வத் தொண்டர்கள் ஆவர். மேலும், அன்றாட வாழ்க்கையின் பல்வேறு துறைகளுடன் தொடர்புடையவர்கள் ஆவர். எனவே அவர்கள் எந்தத் தூய்மையுடனும், உத்வேகத்துடனும் தொண்டாற்றுகின்றார்களோ அதனை எப்போதும் பாராட்ட வேண்டும்.

உயர் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துவது, அழகிய ஒழுக்கங்களை வெளிப்படுத்துவது, ஒருவர் மற்றவரை புன்சரித்தவாறு சந்திப்பது, மற்றவர்களுக்காக தியாக மனப்பான்மையை கொள்வது, போன்றவை ஊழியர்களின் பணி மட்டுமே கிடையாது. மாறாக, விருந்தினர்களும் குறிப்பாக இந்த விஷயத்தை கருத்தில் கொள்ள வேண்டும். நல்லொழுக்கம் இல்லையென்றால் பின்னர் எதுவுமே இல்லை. ஊழியர்களின் அழகிய ஒழுக்கத்தால் மட்டும் சுற்றுப்புறத்தில் அமைதி நிலைபெற முடியாது. மாறாக, மாநாட்டில் கலந்து கொண்டுள்ள அனைவருமே அழகிய ஒழுக்கத்தை வெளிப்படுத்த வேண்டும். பெண்களும் இந்த விஷயத்தை கருத்தில் கொள்ள வேண்டும். ஆண்களும் இந்த விஷயத்தை கருத்தில் கொள்ள வேண்டும்.

புன்சிரிப்பதும் ஈமானின் ஒரு பகுதியாகும் என்று நான் கடந்த முறை ஹதீஸின் ஆதாரத்தை சுட்டிக் காட்டியிருந்தேன். புன்சிரித்துக் கொண்டிருப்பதும் ஸதக்கா ஆகும். (ஜாமிஉத் திர்மிதி,அப்வாபுபிர் மற்றும் ஸிலா, ஹதீஸ் எண்: 1956)

ஜல்ஸாவின் அடிப்படையில் உயரிய நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துவதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் என்ன அறிவுரை வழங்கியுள்ளார்களோ ? அல்லது விருந்தினர்கள் தொடர்பாக என்ன அறிவுரை வழங்கியுள்ளார்களோ? அதன் தரம் என்ன? அன்னார் (அலை) கூறினார்கள்:

நான் மெய்யாகவே கூறுகின்றேன்: மனிதன் தனது நலனை விட தனது சகோதரனின் நலனிற்கு இயன்ற வரை முதன்மை வழங்காத வரை அவனது ஈமான் ஒருபோதும் சரியானதாக ஆக முடியாது. எனது ஒரு சகோதரர் எனக்கு முன்னால் தனது பலவீனம் மற்றும் நோயின் நிலையில் நிலத்தில் தூங்குகிறார் ; மேலும் நான் ஆரோக்கியம் மற்றும் உடல்நலத்தின் நிலையில் அவர் அதில் அமர்ந்து விடக் கூடாது என்பதற்காக கட்டிலை அபகரித்து வைத்துள்ளேன் என்றால், எனது நிலை பரிதாபத்திற்குரியதாகும். நான் எழுந்து, நேசம் மற்றும் அனுதாபத்தின் வழிமுறையின் கீழ் எனது கட்டிலை அவருக்கு கொடுத்து விட்டு நான் தரையில் உறங்குவதை தேர்ந்தெடுக்காமலும் இருந்தால் எனது நிலை வேதனைக்குரியதாகும். எனது ஒரு சகோதரர் நோயாளியாக இருக்கின்றார்.மேலும் ஒரு வலியில் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றார் ஆனால் என்னால் இயன்ற வரை அவருக்கு சுகத்தையும், எளிமையையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு எந்த திட்டமும் தீட்டாமல், அவருடன் ஒப்பிடும்போது நான் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருக்கின்றேன் என்றால் பின்னர் எனது இந்த நிலை மிகவும் பரிதாபத்திற்குரியது ஆகும்.

இந்த விஷயம் ஜல்ஸாவின் சூழலின் அடிப்படையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். அதாவது, எனது ஒரு ஆன்மிக சகோதரர் தனது மனயிச்சையினால் என்னிடம் சற்று கடுமையாகப் பேசி விட்டால் பின்னர் பதிலுக்கு நானும் வேண்டுமென்றே அவரிடம் கடுமையாக நடந்து கொண்டேன் என்றால் பின்னர் எனது இந்த நிலை பரிதாபத்திற்குரியதாகும். இன்னும்கூறப்போனால், நான் அவரது பேச்சுகளை கேட்டு பொறுமை செய்ய வேண்டும்.

மேலும், நான் எனது தொழுகைகளில் அவருக்காக வேதனையுடன் துஆ செய்ய வேண்டும். ஏனெனில், அவர் எனது சகோதரர் ஆவார். மேலும், அவர் ஆன்மிக ரீதியில் நோயாளியாக இருக்கின்றார். எனது சகோதரர் எளியவராக இருந்து அல்லது குறைமதி அல்லது எளிமையினால் அவரிடம் இருந்து தவறு நிகழ்ந்து விட்டது என்றால் பின்னர் நான் அவரை எள்ளி நகையாடக் கூடாது அல்லது ஆக்ரோஷம் அடைந்து அவர் மீது கடுமை காட்டக் கூடாது அல்லது தீய எண்ணத்துடன் அவருடைய குறைகளை அம்பலப்படுத்தக் கூடாது. ஏனெனில் இவை அனைத்தும் அழிவிற்குரிய வழிகள் ஆகும்.

ஒருவர் மென்மையான உள்ளம் படைத்தவராக திகழாத வரையிலும், அனைவரையும் விட தன்னை எளியவராக கருதாத வரையிலும், எல்லா வகையான ஆணவமும் அவரிடமிருந்து அகன்று விடாத வரையிலும் அவர் உண்மையான நம்பிக்கையாளராக ஆக முடியாது. சமுதாயத்தின் தொண்டராக திகழ்வது தொண்டாற்றப்படுவதற்கு தகுதியுடையவராக இருப்பவரின் அடையாளம் ஆகும். மேலும் ஏழைகளிடம் மென்மையானவராக திகழ்ந்து, குனிந்து பேசுவது இறைவனால் ஒப்புக் கொள்ளப்பட்டவருக்கான அடையாளம் ஆகும். மேலும், தீமைக்கு நன்மையைக் கொண்டு பதில் கொடுப்பது நற்பேறின் தாக்கங்கள் ஆகும். மேலும் கோபத்தை விழுங்கிவிடுவதும், கசப்பான விஷயத்தை பொறுத்துக் கொள்வதும் மிகவும் உயர்தரமான வீரமிக்க செயலாகும்.

(ஷஹாதத்துல் குர்ஆன், ரூஹானீ கஸாயீன், தொகுதி 6, பக்கம் 395 - 396)

இந்த பொதுவான வழிகாட்டல்களை அன்னார் (அலை) தம்மை ஏற்றுக் கொண்டவர்களுக்கு வழங்கியுள்ளார்கள். அதனை எல்லா நேரமும் இன்னும் குறிப்பாக ஜல்ஸாவின் நாட்களில் மிக அதிகமாக வெளிப்படுத்த வேண்டும். நாம் இந்த மூன்று நாட்களில் இதன் படி அமல் செய்தால் பின்னர் இந்த விஷயங்களின் படி அமல் செய்வதற்கு சிறிதளவேனும் பழக்கம் ஏற்பட்டு விடும். மேலும் அன்றாட வாழ்க்கையிலும் நம்மால் இந்த பணியை செய்ய முடியும். நிபந்தனை என்னவென்றால், நான் ஜல்ஸாவில் எனது ஆன்மிக மற்றும் ஒழுக்க சீர்திருத்தத்திற்காக சென்றேன் என்ற விஷயம் மனதில் இருக்க வேண்டும். நான் ஜல்ஸாவில் எதனை கற்பதற்காக சென்றேன்? என்ற இந்த சிந்தனையே பிறரின் உரிமைகளை செலுத்துவதன் பக்கம் கவனமூட்டக் கூடிய அந்த நிரந்தரமான அழகிய சமூகத்தை நிலைபெறச் செய்யும். தம்மை விட தமது சகோதரனுக்கு முன்னுரிமை வழங்குவது ஒன்றும் சாதாரண பணி அல்ல. மிகக் கடும் முயற்சியைக் கொண்ட பணி ஆகும். எனவே தான் இதன் தொடர்பு ஈமானுடன் உள்ளது என்று அன்னார் (அலை) கூறியுள்ளார்கள்.

எவரிடத்தில் தியாக மனப்பான்மையும், பிறருடைய உரிமைகளை செலுத்துவதற்கான தன்மையும் இல்லையோ அவருடைய ஈமான் சரியானதல்ல. சாதாரண விஷயங்களினால் மட்டும் அல்லாஹ் பெரும் அருட்களுக்கு வாரிசுகளாக உங்களை ஆக்கி விடமாட்டான். மாறாக, எவர் கடும் முயற்சிகளில் முன்னேறியவராக இருக்கின்றாரோ அவருக்கே அல்லாஹ் எண்ணற்ற முறையில் அருளுகின்றான். அடியார்களுக்கு உரிய உரிமைகளை செலுத்துவது மிகவும் கடினமான பணியாகும்.

எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

அல்லாஹ்விற்கு செலுத்தப்பட வேண்டிய உரிமைகள் சில முறை செலுத்தப்பட்டு விடுகின்றன. ஆனால், அடியார்களுக்குரிய உரிமைகளை செலுத்துவது மிகவும் கடினமான பணியாகும்.

( மல்ஃபூஸாத், தொகுதி 8, பக்கம் 19, 1984-ம் ஆண்டு பதிப்பு)

நாம் நம்மை விட நமது சகோதரருக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்ற இந்த எண்ணத்தை ஒவ்வொருவரும் தமது கருத்தில் கொள்ள வேண்டும். நம்மில் ஒவ்வொருவரிடத்திலும் இந்த எண்ணம் தோன்றிவிட்டால் மேலும், நான் மற்றவர்களின் உரிமையையும் கூட அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்காக செலுத்த வேண்டும் என்ற எண்ணம் தோன்றிவிட்டால் பின்னர் அதுபோன்ற சமூகம் அன்பும் நேசமும் மிக்க சமூகமாக மாறி விடும்.

மேலும் ஜல்ஸாவின் மூன்று நாட்களுக்காக மட்டுமே இந்த அன்பு மற்றும் நேசத்திற்கான வெளிப்பாடு இல்லாமல் முழு வாழ்நாளும் அன்பு மற்றும் நேசத்தின் முன்மாதிரியாக ஆகிவிடும். எப்படிப்பட்ட அழகிய அறிவுரைகளை அன்னார் (அலை) இந்த தூய சமூகத்தை நிலைநாட்டும் பொருட்டு வழங்கியுள்ளார்கள்!

அன்னார் (அலை) கூறினார்கள்: எவரும் கடின வார்த்தைகளை பேச வேண்டாம். மேலும், எனது நடத்தையும் அவ்வாறு இருந்தால் என் மீது பரிதாபம்!

நான் அவருடன் கடுமையாக நடந்து கொள்வதற்கு பகரமாக நான் அவருக்காக துஆ செய்திருக்க வேண்டும். இது எப்படிப்பட்ட சமூகம் என்றால் இதனை இஸ்லாம் நிலைநாட்ட விரும்புகின்றது. மேலும், இது எப்படிப்பட்ட சமூகம் என்றால், இதனை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தம்மை ஏற்றுக் கொண்ட மக்களிடம் காண விரும்புகின்றார்கள்.

அன்னார் (அலை) எடுத்துரைத்துள்ள இந்த விஷயம் எத்தனை அழகு வாய்ந்த விஷயம் ஆகும்!

அதாவது, எவரிடத்தில் சில தீமைகள் இருக்குமோ அவர் ஆன்மிக ரீதியில் நோயாளி ஆவார். அவருக்கு சிகிச்சை அளிப்பது அல்லது அவரது சிகிச்சைக்கு ஏற்பாடு செய்வது எனது கடமையாகும். தற்போது இந்த விஷயம் வெறும் பிறருடைய சீர்திருத்தத்திற்கான விஷயம் மட்டும் இல்லை. மாறாக, உங்களது சீர்திருத்தத்திற்கானதும் ஆகும். இன்னும் கூறப்போனால், மற்றவர்களைக் காட்டிலும் உங்களது சீர்திருத்தத்திற்கானது ஆகும். அதாவது, மனிதன் சுயமே இந்த நோய்களிலிருந்து தூயவனாக இருக்கும்போது தான் மற்றவர்களுடைய ஆன்மிக நோய்களுக்கான சிகிச்சையை செய்ய முடியும்.

**எனவே இந்த நோய்களிலிருந்து தப்பிப்பதற்கு பிறரிடம் குறைகளை காண்பதில் இருந்து விலகியிருக்க வேண்டும். மேலும் உங்களது உள்ளத்தை பிறருக்காக மென்மையானதாக ஆக்கிக் கொள்ள வேண்டும். எல்லா வகையான ஆணவத்தையும் உங்களிடமிருந்து அகற்ற வேண்டும்.**

எனவே, இதனைக் குறித்து விருந்து உபசரிப்பு செய்பவர்களும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்; மேலும் ஜல்ஸாவில் கலந்து கொள்ளக் கூடியவர்களும் மிகவும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். பரஸ்பரம் தவறுகளை பொருட்படுத்தாமல் இருப்பதற்கும், அமைதி மற்றும் அனுதாபத்திற்கான சூழலை உருவாக்குவதற்கும் முயற்சி செய்தால் பின்னர் எந்த நோக்கத்திற்காக நாம் இங்கு ஒன்று கூடியுள்ளோமோ அதனை இந்த மூன்று நாட்கள் பெற்று தரக்கூடியதாக ஆகிவிடும்.

சிலமுறை சில அற்பமான விஷயங்களில் கூட பகைமைகள் உருவாகி விடுகின்றன. மேலும், ஒருவர் மற்றவரை ஏசிபேசுகின்ற இன்னும் கூறப்போனால் அடிதடி வரை நிலைமை சென்றுவிடுகின்ற சூழல் உருவாகி விடுகின்றது. இந்த சூழலை உருவாக்க வேண்டும் என்றால், மேலும், உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முடியாது என்றால் பின்னர் அத்தகைய நபர் ஜல்ஸாவிற்கு வராமல் இருப்பதே சிறந்ததாகும். மேலும், டியூட்டியில் இருப்பவர்கள் (தமது) உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முடியாது என்றால் பின்னர் அவர்கள் டியூட்டி கொடுக்காமல் இருக்கட்டும். ட்ராபிக் (போக்குவரத்து) விவகாரங்களில் குறிப்பாக கஷ்டங்கள் வருகின்றன. பார்கிங் (வாகன நிறுத்தம்) செய்வதற்கு குறுகிய இடங்களே இருக்கின்றன. கார்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பார்கிங் ஏற்பாடு செய்யப்படுகிறது. இந்த முறை அநேகமாக அதிக கார்கள் வரக் கூடும். இடத் தட்டுப்பாடும் கூட ஏற்படலாம். வேறு இடத்திற்கு செல்லும்படி அனுப்பப்பட்டால் ஒத்துழைப்பு வழங்கியவாறு ஒவ்வொரு விருந்தினரும் சென்று விட வேண்டும். பொதுவாக,அல்லாஹ்வின் அருளினால் மக்கள் ஒத்துழைப்பு வழங்குகின்றனர். ஜமாஅத் உறுப்பினர்களுக்கு இப்படிப்பட்ட தர்பிய்யத் இருக்கின்றது. ஆயினும், சிலர் தீய இயல்பு படைத்தவர்களாக இருக்கின்றனர் அல்லது ஜல்ஸா திடலுக்கு சென்றடைவதில் தாமதம் ஏற்பட்டால் நாம் ஜல்ஸாவின் நிகழ்ச்சியை தவறவிட்டு விடுவோம் என்று அவர்கள் கருதுகின்றனர். எனவே அப்படிப்பட்ட மக்கள் எவ்வாறு இருப்பினும் கவனத்தில் கொள்ள வேண்டும்; மேலும் ஏற்பாட்டாளர்களின் நிர்ப்பந்தத்தையும் பார்க்க வேண்டும். ஜல்ஸாவில் இவ்வளவு அக்கறை இருக்குமென்றால் பின்னர் குறித்த நேரத்திற்கு முன்னதாகவே வாருங்கள். மேலும் டியூட்டியில் இருப்பவர்களும் அப்படிப்பட்ட மக்களிடம் சண்டையிடுவதற்கு பகரமாக அவர்களுக்கு அன்புடன் புரிய வையுங்கள். பரஸ்பரம் கடுமையான நடத்தைகளுக்கான ஓர் உதாரணம் கூட நமக்கு முன்னால் வராமல் இருக்கும்படி அல்லாஹ் செய்வானாக. அல்லாஹ் விருந்தினர்களுக்கும் நற்பேறு வழங்குவானாக! அவர்கள் எந்தவொரு துறையின் ஊழியர்களையும் எந்த வகையிலும் சோதனையில் ஆழ்த்தாமல் இருப்பார்களாக! மேலும், ஊழியர்களின் மனதைரியத்தையும் அல்லாஹ் அதிகரிப்பானாக!

இந்த மூன்று நாட்களும் நமக்கு கூட்டுப்பாடல் பாடக்கூடிய, கவிதைகளை படிக்கக் கூடிய மற்றும் அன்பு நேசத்தின் புகழைப் பாடக் கூடிய நாட்களாக மட்டும் இல்லாமல், உண்மையான மற்றும் இஸ்லாமிய சமூகத்தின் தனித்தன்மையாக இருக்கக் கூடிய அன்பு மற்றும் நேசத்தின் சூழலை நிலை பெறச் செய்வதற்கான ஆர்வத்தை தரக்கூடிய தர்பிய்யத்தை அல்லாஹ் இந்த மூன்று நாட்களில் ஏற்படுத்துவானாக.

பரிசுத்தமான சிந்தனைகளை கொண்டிருப்பதன் பக்கம் மீண்டும், மீண்டும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கவனமூட்டியுள்ளார்கள். அந்த சிந்தனைகளில் நன்மை மற்றும் தூய்மை மட்டுமே இருக்க வேண்டும் என்றும் அன்னார் (அலை) கவனமூட்டியுள்ளார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் விருந்தினர்களுக்கு அவர்களின் கடமைகளின் பக்கம் கவனமூட்டியவாறும் தூய எண்ணங்களை கொண்டிருப்பதன் பக்கம் கவனமூட்டியவாறும் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இறைவன் மகிழ்ச்சியடைய வேண்டும்; மேலும் அவனது திருப்தி கிடைக்க வேண்டும்; அவனது கட்டளையின் படி செயல்பட வேண்டும் என்பதற்காக மட்டுமே நன்மை செய்ய வேண்டும். மேலும், அந்த நன்மைக்கு நற்கூலி கிடைக்கும் அல்லது கிடைக்காது என்ற எண்ணத்திற்கு அப்பாற்பட்டு நன்மை செய்திடல் வேண்டும். ஈமான் அந்நிலையில் மட்டுமே முழுமையடைகின்றது. அதேநேரம் இந்த ஐயமும், சந்தேகமும் இடையில் இருந்து அகற்றப்பட வேண்டும். அதாவது, நான் செய்கின்ற பணியை நற்கூலிக்காக செய்ய வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே இருத்தல் கூடாது. மாறாக, அல்லாஹ்வின் திருப்தியை பெற வேண்டும் என்பதற்காக நன்மை செய்ய வேண்டும்.

அன்னார் (அலை) கூறினார்கள்: அல்லாஹ் எந்த ஒரு நன்மையையும் வீணாக்குவதில்லை என்பது உண்மை தான்.

إِنَّ اللّٰهَ لَا يُضِيعُ أَجْرَ الْمُحْسِنِينَ

(அத்தவ்பா: 120) அல்லாஹ் நன்மை செய்யக்கூடியவர்களுக்கான நற்கூலியை ஒருபோதும் வீணாக்குவதில்லை. ஆயினும், நன்மை செய்யக் கூடியவருக்கு நற்கூலி நோக்கமாக இருத்தல் கூடாது. பாருங்கள்! ஒரு விருந்தாளி இங்கு ஓய்வு கிடைக்கும்; குளிர்பானங்கள் கிடைக்கும்: அல்லது சுவையான உணவு கிடைக்கும் என்பதற்காக மட்டுமே இங்கு வருகின்றார் என்றால், பின்னர் அவர் கருத்தில் கொள்ளட்டும்! அவர் வேண்டுமானால் இந்த விஷயங்களுக்காக இங்கு வரலாம். ஆனால், விருந்து உபசரிப்பு செய்பவர் முடிந்த வரை அந்த விருந்தாளிக்கு விருந்து உபசரிப்பு செய்பவர் எந்தக் குறைவும் செய்யாமல் இருப்பதும், அவருக்கு வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதும் அந்த விருந்து உபசரிப்பாளரின் மீது கடமையாகும். அவர் அவ்வாறே ஏற்படுத்தியும் கொடுக்கின்றார். ஆனால், விருந்தாளி சுயமே அவ்வாறு எண்ணம் கொள்வது அவருக்கு பாதிப்பை ஏற்படுத்துவதற்கான காரணி ஆகும். (மல்ஃபூஸாத் , தொகுதி 2, பக்கம் 371 -372, 1984-ம் ஆண்டு பதிப்பு)

ஆக, இந்த சிந்தனையையே ஒவ்வொரு விருந்தாளியும் கருத்தில் கொள்ள வேண்டும். சில விருந்தினர்கள் இருக்கின்றனர். அவர்களின் உறவினர்கள் இங்கு வசிப்பதில்லை. எனவே அவர்கள் ஜமாஅத்தின் ஏற்பாட்டின் கீழ் தங்குகின்றனர். ஆனால், சிலமுறை அவர்கள் தங்குமிடத்திற்காக எப்படிப்பட்ட கோரிக்கைகளை முன் வைக்கின்றனர் என்றால் அவற்றை நிறைவேற்றுவது கடினம் ஆகும். அதேபோன்று இன்னும் சில வசதிவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க முடிவதில்லை. ஏனெனில், ஜல்ஸாவின் பரந்துபட்ட ஏற்பாடுகளின் கீழ் இந்த அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பது சாத்தியமற்றது ஆகும். பொதுவாக, மக்கள் இதனை புரிந்தும் கொள்கின்றனர். தற்போது இரண்டு மூன்று நாட்களுக்கு முன் நிகழ்ந்த விஷயம் ஆகும். என்னை ஒரு குடும்பம் சந்தித்தது. அவர்கள் போதுமான காலத்திற்கு முன்னரே ஏற்பாட்டாளர்களுக்கு தகவல் கொடுத்து இருந்தனர். ஆனால், ஒரு

தவறான புரிதலின் காரணமாக அவர்கள் விரும்பிய தங்குமிடத்தில் அவர்கள் தங்குவதற்கான ஏற்பாடு செய்ய முடியாமல் போய்விட்டது. எனவே அவர்கள் தங்களின் தங்குமிடத்திற்கான ஏற்பாட்டை ஒரு அன்பரின் வீட்டில் செய்து கொண்டார்கள். அந்த அன்பரின் வீடும் கூட மிகவும் சிறியதாகும். கீழே விரிப்பை விரித்து அல்லது போர்வையை விரித்து தூங்கிக் கொள்வார்கள். ஆக, விருந்து உபசரிப்பவருக்கும், விருந்தினருக்கும் கஷ்டத்தை எதிர் கொள்ள நேரிடும் என்றபோதிலும் ஜல்ஸாவில் கலந்து கொள்வோம் என்பதில் அவர்கள் மிகவும் மகிழ்ச்சி கொண்டுள்ளனர். இந்த விஷயங்களை அவர்கள் மிகவும் சிரித்தபடியே நான் கேட்டதற்கு பிறகு என்னிடம் கூறினர். எந்த முறையீடும் செய்யவில்லை. பெரும்பாலான விருந்தினர்கள் இப்படிபட்டவர்களாகவே இருக்கின்றனர். இன்னும் சிலர் என்னை சந்திக்கின்றபோது அவர்களின் இயல்பை அறிகின்றபோது அவர்களால் ஜமாஅத்தின் ஏற்பாட்டின் கீழ் தங்க முடியாது என்பது எனக்கு தெரிய வருகின்றது. ஆயினும், அவர்கள் மகிழ்ச்சியுடன் தங்குகின்றனர். எனது எண்ணம் அவர்களுக்கு எதிராக இருந்தபோதிலும், அநேகமாக அவர்களால் தங்க முடியாது என்பதே எண்ணமாக இருக்கின்றது என்றபோதிலும், அவர்கள் மகிழ்ச்சியுடன் தங்குகின்றனர். மேலும், இப்படிப்பட்டவர்களின் எண்ணிக்கையே பெரும்பான்மையாக உள்ளது. ஆனால், சிலர் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றனர் என்றால், அவர்களுக்கு மிக அதிகமான புகார்களும் இருக்கின்றன. மனமகிழ்ச்சியுடன் அல்லாஹ்வின் திருப்திக்காக இந்த நாட்களை கழித்தால் பின்னர் அல்லாஹ் வேறு வகையில் அருள் செய்து விடுகின்றான்.

தற்போது அவர்களுக்காக இங்கு தங்குமிடங்கள் இருந்தன. கூடாரங்கள் இருந்தன அல்லது கூட்டுத் தங்குமிடங்கள் இருந்தன. எனது எண்ணம் என்னவென்றால், அதிகமான மக்களின் காரணமாக அவை நிறைந்து விட்டன. எனவே எங்கு தங்குவது கஷ்டமாக இருக்குமோ அங்கு தங்குவதற்கான ஏற்பாடு செய்யப்படக் கூடும். எனவே அந்த ஏற்பாட்டையும் விருந்தினர்கள் மகிழ்ச்சியுடன் சகித்துக் கொள்ள வேண்டும்.

எவ்வாறு இருப்பினும், விருந்து உபசரிப்பவர்கள் மீதும் இது கடமையாகும். அதாவது, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியது போன்று முடிந்த வரை விருந்தாளிகளுக்கு விருந்து உபசரிப்பவர்கள் எளிமையை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். மேலும், விருந்தாளிகளுக்கும் சாதாரண கஷ்டங்களை சகித்துக் கொண்டதற்கான சிறந்த நற்கூலியை அல்லாஹ் வழங்குவானாக. இதனையும் கருத்தில் கொள்ள வேண்டும். மேலும், அல்லாஹ்விடமிருந்து நற்கூலியை பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

சமூகத்தில் அமைதியும், நிம்மதியும் நிலைபெறுவதற்கும், அமைதி மற்றும் சமாதானத்திற்கான சூழலை உருவாக்குவதற்கும், அமைதி மற்றும் சமாதானத்தை பரப்புவதற்காகவும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்ன அறிவுரையை வழங்கியுள்ளார்கள்? ஒருமுறை ஒரு நபர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார். மேலும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எந்த இஸ்லாம் மிகச் சிறந்தது? என்று கேட்டார். அதற்கு, தேவையுடையவர்களுக்கு உணவளியுங்கள். மேலும் நீங்கள் அறிந்த நபருக்கும், அறியாத நபருக்கும் ஸலாம் கூறுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஸஹீஹ் புகாரி, கிதாபுல் ஈமான், ஹதீஸ் எண்: 12)

சமூகத்தில் அன்பையும், சகோதரத்துவத்தையும் உருவாக்குவதற்கும் அமைதி மற்றும் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கும் இது எப்படிப்பட்ட அழகிய வழிமுறை என்றால் இதனை மேற்கொண்டால் பின்னர் அமைதி மற்றும் சமாதானத்தை பரப்பக் கூடிய சமூகம் நிலை பெற்று விடும்.

உலகில் ஏராளமான குழப்பங்கள் எதனால் ஏற்படுகின்றன என்றால் ஏழை மேலும் மேலும் ஏழையாக ஆகிக் கொண்டிருக்கின்றார். இன்றும் கோடிக்கணக்கான மக்கள் இருக்கின்றனர். அவர்களுக்கு இரண்டு வேளை உணவு கூட கிடைப்பதில்லை. உணவு உண்டார்கள் என்றாலும் கூட தங்குமிடம் இல்லை. பணக்கார நாடுகள் என்று கூறப்படும் நாடுகளிலும் கூட இந்த விஷயங்கள் இருக்கின்றன. இங்கு இந்த நாட்டிலும், யூ.கேவிலும் இந்த நிலை உள்ளது. இதனை பணக்கார நாடு என்று கூறப்படுகின்றது. எனினும், தற்போது அவர்களின் ஆட்சியின் நிலை அவ்வாறு இல்லை என்றாலும் கூட ஏராளமான நாடுகளை விட சிறந்ததாக இருக்கின்றது. ஆயிரக்கணக்கான மக்களும், குழந்தைகளும் சாலைகளில் கிடக்கின்றனர். அதிக விலைவாசியின் காரணமாக ரொட்டி கூட சரியான முறையில் கிடைப்பதில்லை. மேலும், தங்குமிடம் கூட அவர்களுக்கு இல்லை.

எனவே, பசித்தவர்களுக்கு உணவளியுங்கள் என்பது இஸ்லாத்தின் அடிப்படையான போதனை ஆகும். அந்தோ! முஸ்லிம்கள் இந்த போதனையை புரிந்திருக்க வேண்டுமே! மேலும், அவர்களின் ஆட்சியாளர்கள் தமது குடிமக்களுக்கு செலுத்த வேண்டிய உரிமையை செலுத்தக் கூடியவர்களாக திகழ வேண்டும். மேலும், அவர்கள் தங்களது கருவூலத்தை மட்டுமே நிறைப்பவர்களாக இருத்தல் கூடாது. மாறாக, ஏழைகள் மற்றும் வறியவர்களின் தேவைகளை நிறைவேற்றி சமூகத்திலிருந்து நிம்மதியின்மை மற்றும் அநீதியை அகற்ற வேண்டும். இன்றைய நாட்களில் நிம்மதியின்மையும் இந்த காரணத்தினால் தான் ஏராளமான இடங்களில் பரவியுள்ளது.

எவ்வாறு இருப்பினும், நான் இந்த விஷயங்களை தற்செயலாக குறிப்பிட்டுள்ளேன். அடுத்து, கூறினார்கள்: ஸலாம் கூறுங்கள்! தமது சமூகத்தில் நடைமுறைப்படுத்துவதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸலாம் கூறுவதற்கு வலியுறுத்தி இருந்தார்கள். ஸலாம் கூறுவது என்பது வெறும் வாயினால் கூறிவிடுவது மட்டும் கிடையாது. மாறாக, மனிதன் உள்ளத்தால் ஸலாம் கூறும்போது பின்னர் அமைதியை ஏற்படுத்துவதற்கும், பரப்புவதற்கும் எண்ணம் கொள்கின்றார். ஒருவர் மற்றவருக்காக நல்ல உணர்வுகளையும் கொள்கின்றார். அவரது துன்பங்களை அகற்றுவதற்கு முயற்சியும், துஆவும் செய்கின்றார். எனவே இந்த நாட்களில் இங்கு ஒவ்வொரு அஹ்மதியும் அமைதியை பரப்புவதற்கும், அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறுவதை நடைமுறைபடுத்துவதற்கும், ஒருவர் மற்றவருக்காக நல்ல உணர்வுகளை தம்மிடம் உருவாக்குவதற்கும் முயற்சி செய்ய வேண்டும்.

எவர்களிடமிருந்து தங்களுக்கு பயன் கிடைக்கின்றதோ அவர்களுடன் மக்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் சந்தித்து விடுகின்றனர். மேலும், மிகவும் ஆர்வத்துடன் ஸலாமும் கூறிவிடுகின்றனர். அல்லது எந்த மக்களுடன் சாதாரண தொடர்புகள் இருக்கின்றனவோ அவர்களுடனும் மிகவும் மகிழ்ச்சியுடன் சந்திக்கின்றனர். ஆனால், அந்த மக்கள் எவர்களின் உள்ளங்களில் ஒருவர் மற்றவருக்கு எதிராக பகைமை உள்ளனவோ அவற்றை அகற்றி விடும்போதும், உள்ளத்திலிருந்து ஒருவர் மற்றவரின் அமைதிக்காக துஆ வெளிப்படும்போதும் தான் உண்மையான அமைதி மற்றும் சமாதானம் நிலைபெற முடியும்.

எனவே இந்த ஜல்ஸாவில் அதுபோன்ற மக்களும் பகைமைகளை அகற்றி அமைதிக்கான தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். மேலும் பொதுவான வகையில் இந்த அனைத்து சூழலிலும் அமைதிக்கான தூதுச் செய்தியை எட்ட வைத்துக் கொண்டே இருக்க வேண்டும். அல்லாஹ் இதன்படி அமல் செய்வதற்கும் ஒவ்வொருவருக்கும் நற்பேறு வழங்குவானாக. மேலும், இந்த ஜல்ஸாவின் அனைத்து சூழல்களும் முழுமையான முறையில் அமைதி மற்றும் சமாதானத்திற்கான சூழலாக ஆகிவிட்டடுமாக. இன்னும் கூறப்போனால், உயர் தரமான ஒழுக்கம் மற்றும் அடியார்களுக்குரிய உரிமைகளை நிறைவேற்றுதல் போன்றவை நமது வாழ்வின் நிரந்தர அங்கமாக ஆகிவிடட்டுமாக!

ஜல்ஸாவின் ஏற்பாடுகளின் அடிப்படையில் சில பொதுவான விஷயங்களின் பக்கமும் நான் கவனமூட்ட விரும்புகிறேன். அதனை ஒவ்வொருவரும் கருத்தில் கொள்ள வேண்டும். முதலாவது விஷயம் இதுவாகும். அதாவது, ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளை அமைதியாகவும், கவனமாகவும் கேட்க வேண்டும். சில சொற்பொழிவுகளை கேட்பதும், சிலவற்றை கேட்காமல் இருப்பதும் கூடாது. ஜல்ஸாவில் வந்து அமருங்கள் என்று நான் இது தொடர்பாக முன்னரும் கூறியிருக்கின்றேன்.

சில சொற்பொழிவுகள் கேட்கப்படுகின்றன ; மேலும் அவர்களின் உணர்ச்சி மிக்க பேச்சுகளை விரும்பப்படுகின்றன. மேலும், சில சொற்பொழிவுகள் கேட்கப்படுவதில்லை. இந்த

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad (District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam (Gen.Sec. Melapalayam)

விஷயத்திலிருந்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கடுமையாக தடுத்துள்ளார்கள். (மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 398 - 401)

சொற்பொழிவாளர்கள் மிகவும் கடின உழைப்புடன் சொற்பொழிவுகளை தயார் செய்து வருகின்றனர். கலந்து கொள்கின்ற அனைவரும் ஜல்ஸாவின் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு ஆன்மிக மற்றும் அறிவார்ந்த பயனை பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

அடுத்து, ஜல்ஸாவின் நாட்களில் இறை தியானம் மற்றும் தரூத் ஓதுவது ஆகியவற்றின் பக்கமும் குறிப்பாக கவனம் செலுத்துங்கள். பொதுவாக, இன்றைய நாட்களோ முஹர்ரம் நாட்களாக இருக்கின்றன. இன்று முஹர்ரம் பத்தாம் நாள் ஆகும். இந்த நாட்களில் குறிப்பாக தரூத் ஓத வேண்டும். மேலும், அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்தஸ்தையும், தகுதியையும் உயர்த்திக் கொண்டே செல்ல வேண்டும்; மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூதுச் செய்திக்கு அல்லாஹ் வெற்றியும், மேன்மையும் வழங்க வேண்டும்; மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஷரீஅத்திற்கு பாதுகாப்பையும், மகத்துவத்தையும் வழங்க வேண்டும்; அன்னாரின் சமுதாயத்திற்காக அன்னார் (ஸல்) அவர்கள் செய்த துஆக்களிலிருந்து நாம் பயன் பெறக் கூடியவர்களாக இருக்க வேண்டும்; மேலும், அல்லாஹ் இந்த சமுதாயத்தை எல்லா வகையான பிரிவினைகளிலிருந்தும் தூய்மைப்படுத்தி விட வேண்டும் என்ற எண்ணங்களுடன் தரூத் ஓத வேண்டும்.

இன்று முஸ்லிம்கள் அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்களின் பெயரால் என்னவெல்லாம் செய்து கொண்டிருக்கின்றனர்! அவர்கள் இஸ்லாத்திற்கு அவப்பெயர் சேர்த்து வருகின்றனர். அல்லாஹ் அவர்களுக்கு அறிவை வழங்குவானாக. மேலும், காலத்தின் இமாமை ஒப்புக் கொள்ளக் கூடியவர்களாகவும் ஆக்குவானாக. ஜுமுஆ நாளன்று துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுகின்றன. இந்த விஷயத்தை துஆக்களில் நினைவில் கொள்ளுங்கள். அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் பெயரில் தான் அந்த பெயர் தாங்கி முஸ்லிம்கள் இன்றைய நாளில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆன்மிக மற்றும் பௌதீக குடும்பத்தினர் மீது அநீதி இழைத்திருந்தனர். தற்போது அதே அநீதியை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆன்மிக குடும்பத்தினர் மீதும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் அன்னாரின் ஜமாஅத்தின் மீதும் மக்கள் செய்து கொண்டிருக்கின்றனர்.

பாகிஸ்தானில் இன்றைய நாட்களில் வேதனை மிகுந்த நிலைமைகள் உள்ளன. எல்லா புறமிருந்தும் எதிரிகள் ஜமாஅத்திற்கு பாதிப்பை ஏற்படுத்த முயற்சி செய்து வருகின்றனர். மேலும், நாங்கள் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் மீதான நேசத்தினால் இவற்றை செய்கின்றோம் என்றும், அஹ்மதிகள் நவூதுபில்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இழிவுபடுத்தும் குற்றத்தை செய்து வருகின்றனர் என்றும் அவர்கள் கூறுகின்றனர். ஆனால் உள்ளபடியே நமது ஈமானின் அடித்தளமே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காத்தமுன்னபிய்யீன் என்பதிலும், அன்னார் (ஸல்) கொண்டு வந்துள்ள ஷரீஅத்தின் மீது நம்பிக்கை கொள்வதிலும் உள்ளது. உண்மையில் நாம் எப்படிப்பட்ட மக்கள் என்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கட்டளைக்கு செவிசாய்த்தவாறு வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியை நாம் ஏற்றுக் கொண்டவர்கள் ஆவோம்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இறைத் தூதரின் மீதான நேசம் எந்த தரத்தை கொண்டதாக இருந்தது? மேலும், அதன் காரணமாக அல்லாஹ் அன்னாருக்கு எவ்வாறு அருளினான்? இது தொடர்பாக அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: ஒருமுறை இவ்வாறு நிகழ்ந்தது. அதாவது, தரூத் ஓதுவதில் அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக அருளை வேண்டுவதில் ஒரு காலம் வரை நான் மிகவும் மூழ்கியிருந்தேன். ஏனெனில் இறைவனின் வழிகள் மிகவும் நுட்பமான வழிகள் ஆகும். அது நபிகள் நாயகம் (ஸல்) என்ற ஊடகம் இன்றி நமக்கு கிடைக்க முடியாது என்பது எனது நம்பிக்கை ஆகும். அல்லாஹ்வும் அவ்வாறே கூறியுள்ளான்;

وَابْتَغُوْٓا اِلَيْهِ الْوَسِيْلَةَ

(அல்மாயிதா: 36)

அந்நிலையில் ஒரு காலத்திற்கு பிறகு ஆன்மிகக் காட்சியில் நான் (இவ்வாறு) கண்டேன். அதாவது தண்ணீர் எடுத்துக் கொண்டு வரக் கூடிய இருவர் வந்தனர். ஒருவர் உட்புறமான வழிகளிலிருந்தும் மற்றொருவர் வெளிப்புறமான வழியிலிருந்தும் எனது வீட்டினுள் நுழைந்தனர். மேலும் அவர்களின் தோள்களின் மீது ஒளிகளின் குடங்கள் இருந்தன. தண்ணீர் இல்லை ; மாறாக, ஒளியின் குடங்களை சுமந்து கொண்டிருந்தனர். மேலும்,

هٰذَا بِمَا صَلَّيْتَ عَلٰى مُحَمَّدٍ

என்று கூறிக் கொண்டிருந்தனர். (ஹக்கீக்கத்துல் வஹீ, ரூஹானீ கஸாயீன், தொகுதி 22, பக்கம் 131- அடிக்குறிப்பு)

அதாவது, நீர் முஹம்மது ரஸூலுல்லாஹ் அவர்களுக்காக ஸலாவத் ஓதிக் கொண்டிருந்ததன் காரணமாகவே இந்த அனைத்து ஒளியின் அருட்கொடை (உமக்கு வழங்கப்படுகின்றது).

ஆக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அன்னார் (அலை) கொண்டிருந்த அன்பின் நிலை இதுவாக இருந்தது. மேலும்,இவ்வாறு அல்லாஹ் அன்னாருக்கு அருளவும் செய்தான். எனவே, நான் என்னவெல்லாம் பெற்றேனோ அவற்றை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஊடாகவும் அன்னாரின் மீது தரூத் ஓதியதனாலும் அன்னாரின் மீதான நேசத்தில் என்னை மாய்த்துக் கொண்டதாலும் மட்டுமே பெற்றேன் என்பதை அன்னார் (அலை) எண்ணற்ற இடங்களில் வெளிப்படுத்தியுள்ளார்கள். ஆக, ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடமிருந்து என்னை விலகியவனாக நீங்கள் எவ்வாறு கருதுகின்றீர்கள்? எவ்வாறு இருப்பினும், இந்த நாட்களில் இறை தியானத்துடன் குறிப்பாக தரூத் ஓதுவதன் பக்கமும் நிறைய கவனம் செலுத்துங்கள். அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் எந்த அருட்களுக்கான வாக்குறுதிகளை செய்துள்ளானோ அந்த அருட்களை விரைவாக முழு உலகிலும் பரப்புவானாக.

ஜல்ஸா திடலில் குறிப்பாக பெண்கள் இந்த விஷயத்தையும் கருத்தில் கொள்ளுங்கள். ஓரளவு புரிதல் கொண்ட குழந்தைகளுக்கு ஜல்ஸாவின் நிகழ்ச்சிகளின்போது அமைதியாக அமர்ந்திருக்க வேண்டும் என்ற உணர்வை அவர்களுக்கு ஏற்படுத்துங்கள். பிள்ளைகளின் தர்பிய்யத்தே மனதில் வலுவாக இருக்கின்றது. எந்தப் பெண்கள் மாநாட்டுப் பந்தலில் அமர்ந்திருக்கின்றனரோ அவர்களும் குறைவாக பேசுவதற்கும், நிகழ்ச்சிகளை கேட்பதன் பக்கமும் கவனம் செலுத்துவதற்கு முயற்சி செய்யுங்கள். பிள்ளைகள் குறைவாகத் தான் கூச்சலிடுகின்றனர். பெண்கள் பரஸ்பரம் குழந்தைகளின் பெயரில் சாக்குப் போக்குகளைக் கூறி அதிகமாக பேசிக் கொண்டிருக்கின்றனர் என்றும் புகார்கள் வருகின்றன. எனவே இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

இதே போன்று பாதுகாப்பின் அடிப்படையிலும் ஆண்கள் மற்றும் பெண்களின் ஜல்ஸா திடலில் மாநாட்டில் கலந்து கொண்டுள்ள ஒவ்வொரு நபரும் தமது சுற்றுப் புறத்தின் மீது பார்வை வைக்க வேண்டும். இது மிகப் பெரிய பாதுகாப்பிற்கான வழிமுறையாகும். மேலும், இதே போன்று உங்களது நிகழ்ச்சிகளில் என்ன வழிகாட்டல்கள் எழுதப்பட்டுள்ளனவோ அவற்றையும் கவனமாக படியுங்கள். மேலும் அவற்றின் படி அமல் செய்யுங்கள். ஜல்ஸாவிலிருந்து அழகிய முறையில் பயன் பெறுவதற்கான நற்பேறை அல்லாஹ் அனைவருக்கும் வழங்குவானாக. மேலும், தனது கருணைகள் மற்றும் அருட்களின் மழையை நம் மீது பொழியச் செய்து கொண்டிருப்பானாக!

தமிழாக்கம்:
மவ்லவி: அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * *

## நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

## நபி மொழி

**கூட்டுத் தொழுகையின் முக்கியத்துவம்**

(2420) : ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: தொழுவதற்கான கட்டளையை நான் வழங்கி, பின்னர் அவர்கள் (தொழத்) துவங்கிவிட வேண்டும்;அதன் பிறகு, (கூட்டுத்) தொழுகைக்கு வருகை தராத மக்களின் வீடுகளுக்கு நான் செல்ல வேண்டும்; மேலும் அவர்கள் உள்ளே இருக்கும்போது, நான் வெளியில் இருந்து அவர்களின் வீடுகளை எரித்து விட வேண்டும் என்று நான் எண்ணம் கொண்டேன்.

(ஸஹீஹ் புகாரி, கிதாபுல் குஸூமாத், காதியான் பதிப்பு 2008-ம் ஆண்டு )

**மல்ஃபூஸாத்... (1ம் பக்க தொடர்ச்சி)**

அருட்களை பெற விரும்புகின்றனர். இது எவ்வளவு விநோதமான விஷயம் ஆகும்! உண்மையான முஸ்லிம் அதாவது எவருடைய இறைவன் உயிருள்ளவனாகவும், எவருடைய நபி உயிருள்ள நபியாகவும், எவருடைய வேதம் உயிருள்ள வேதமாகவும் இருக்கின்றதோ, மேலும், எந்த மார்க்கத்தில் நிரந்தரமாக உயிருள்ளவர்களின் வருகையின் தொடர் நிலை பெற்று இருக்குமோ மேலும், எல்லாக் காலத்திலும் ஓர் உயிருள்ள மனிதர் இறைவனின் இருப்பின் மீது உயிருள்ள ஈமானை உருவாக்குவதற்கு தோன்றுகின்றார் என்ற நம்பிக்கையில் இருப்பாரோ , அந்நிலையில் அந்த முஸ்லிம் உயிருள்ள இறைவனை விட்டு விட்டு மக்கிப்போன எலும்புகள் மற்றும் மண்ணறைகளை தேடிச் செல்வதில் மும்முரமாக இருந்தால் பின்னர் நிச்சயம் அது விநோதமான மற்றும் ஆச்சரியமான விஷயம் ஆகும்.

**உயிருள்ளவர்களின் தோழமையை தேடுங்கள்**

எனவே, நீங்கள் உயிருள்ளவர்களின் தோழமையை தேடுங்கள். மேலும், மீண்டும், மீண்டும் அவரிடம் சென்று அமருங்கள். ஆம்! நாம் இதனையும் கூறுகின்றோம். அதாவது, ஒன்றிரண்டு தடவைகளில் தாக்கம் ஏற்படுவதில்லை. அல்லாஹ்வின் நடைமுறை இதுபோன்றே நிலைபெற்று வருகின்றது. அதாவது, முன்னேற்றம் என்பது படிப்படியாகவே ஏற்படும். உதாரணமாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஜமாஅத்தில் படிப்படியாகவே முன்னேற்றம் நிகழ்ந்தது. நபித்துவத்தின் வழியில் எந்த ஜமாஅத் நிலைபெறுமோ அதிலும் படிப்படியான முன்னேற்றத்திற்கான சட்டம் செயலாற்றும். எனவே, ஸஹாபிகளைப் போன்று உங்களது வியாபாரங்களை விட்டு விட்டு இங்கு வந்து மீண்டும், மீண்டும் ஒரு குறிப்பிட்ட காலம் வரை தோழமையில் தங்குங்கள். அப்போதுதான் ஸஹாபிகள் கண்டதை நீங்கள் பார்ப்பீர்கள். மேலும், அபூபக்ர் (ரலி) மற்றும் உமர் (ரலி) மற்றும் ஏனைய ஸஹாபிகள் (ரலியல்லாஹு அன்ஹும்) பெற்றதை நீங்கள் பெறுவீர்கள்.

(மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 476, காதியான் பதிப்பு 2018-ம் ஆண்டு)

**தஃப்ஸீரே கபீர்... (1ம் பக்க தொடர்ச்சி)**

ஆகும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். மேலும், இறைவனுடனான சந்திப்பு என்பது ஓர் அருட்கொடையாகும். எந்த அறிவு படைத்த மனிதனும் தனது அன்பருடனான சந்திப்பை சுமையாக கருத மாட்டான்.

كَأَنَّكَ تَرَاهُ وَإِنْ لَّمْ تَكُنْ تَرَاهُ فَإِنَّهُ يَرَاكَ

என்பதையே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ இறை வணக்கத்தின் அடையாளமாக கூறியுள்ளார்கள். (முஸ்லிம், தொகுதி 1, கிதாபுல் ஈமான்)

அதாவது, சரியான தொழுகை இதுவே ஆகும். அதாவது, நீங்கள் இறைவனை காண வேண்டும் அல்லது குறைந்தபட்சம் தொழுகையின் நேரத்தில் இறைவன் என்னைப் பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்க வேண்டும். எனவே இத்தனை பெரும் அருட்கொடையை சுமையாக கருதுவது கடும் அநீதியாகும். தொழுகை அல்லாஹ்வின் பெரும் அருட்கொடைகளைச் சார்ந்ததாகும். என்னுடைய கோட்பாடு என்னவென்றால், மனிதன் ஒரு தொழுகையை விட்டு விட்டாலும் கூட அவர் தொழுகையாளி என்றழைக்கப்பட முடியாது. ஏனெனில்,

إِقَامَةُ الصَّلٰوةِ

என்பதற்கான கட்டளை உள்ளது. மேலும் அது நிரந்தரத்தன்மையை விரும்புகின்றது. ஒருவேளை தொழுகை விடுபட்டு விட்டால் கூட பின்னர் நிரந்தரத் தன்மை இருக்காது.

نَافِلَةً لَّكَ

என்பதில் இந்த விஷயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது: அதாவது, இறை வணக்கத்திற்கான சந்தர்ப்பம் கொடுப்பது நமது ஒரு கருணையாகும் என்று இறைவன் கூறியுள்ளான். அல்லது தஹஜ்ஜுத் தொழுகை முந்தைய நபிமார்களின் மீது கடமையாக்கப்படாமல் இருந்திருக்க சாத்தியம் உள்ளது. அந்நிலையில் இதன் பொருள் இதுவாகும். அதாவது, இந்த இறை வணக்கத்திற்கான சந்தர்ப்பம் கிடைப்பது உங்கள் மீதான சிறப்பு அருட்கொடை ஆகும்.

مَقَامًا مَّحْمُوْدًا

. என்பதில் ஒரு மாபெரும் முன்னறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. உலகில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த அளவிற்கு ஏச்சுப் பேச்சுகளுக்கு ஆளானார்களோ அந்த அளவிற்கு வேறு எவரும் ஏச்சுப் பேச்சுகளுக்கு ஆளாகவில்லை. இன்று வரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த அளவிற்கு ஏச்சுப் பேச்சுகளுக்கு ஆளாகியுள்ளார்களோ அந்த ஏச்சுப் பேச்சுகளின் கோடியில் ஒரு பங்கிற்கு சமமான ஏச்சுப் பேச்சுகளுக்கு கொள்ளையன், தீய நடத்தை கொண்டவர், மோசமானவர் மற்றும் தீயவரிலும் மிகவும் தீயவரும் கூட ஆளாகியிருக்க மாட்டார். அந்த ஏச்சுப் பேச்சுகளுக்கு பகரமாக ஆறுதல் வழங்கும் வகையில் அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு புகழுக்குரிய அந்தஸ்தை வழங்கினான்.

அல்லாஹ் கூறினான்: எந்த அளவிற்கு எதிரி ஏசி பேசுகின்றானோ அதற்கெதிரில் நாம் நம்பிக்கையாளர்களைக் கொண்டு உமக்கு ஆதரவாக ஸலவாத் ஓதச் செய்வோம். மேலும் அதேபோன்று அர்ஷிலிருந்து நாமும் உம்மை பாராட்டுவோம். இவற்றிற்கு எதிரில் எதிரியின் ஏச்சுப் பேச்சுகளுக்கு என்ன மரியாதை இருக்கின்றது?

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 4,பக்கம் 374,காதியான் பதிப்பு-201)



GRIZZLY
BE ALWAYS AHEAD
Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india


**குத்பா பேருரை....(12-ம் பக்க தொடர்ச்சி)**

நன்றியுணர்வுடனும் அன்னாருடன் மர்ஹூமா வாழ்வைக் கழித்தார்கள். மர்ஹூமா அல்லாஹ்வின் அருளினால் வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். முறையாக சந்தா செலுத்துவதில் போட்டிபோட்டுக் கொண்டு பங்கு பெறக் கூடியவராக இருந்து வந்தார்கள். மேலும், கிலாஃபத்துடன் மிகவும் நேசம் மிகுந்த தொடர்பு இருந்தது. 1977-ம் ஆண்டிலிருந்து 2007 வரை லஜ்னா இமாயில்லாஹ்வில் பல்வேறு பொறுப்பில் தொண்டாற்றும் நற்பேறு அன்னாருக்கு கிடைத்தது. உள்ளூர் நாயிப் சத்ர் லஜனாவாகவும், உள்ளூர் சத்ர் லஜ்னாவாகவும், மண்டல சத்ர் ஆகவும் மர்ஹூமா இருந்துள்ளார்கள். இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தை பரப்புவதற்காக மிகுந்த அன்புடனும்,ஆர்வத்துடனும் தப்லீஃக் நிகழ்ச்சிகளை வடிவமைத்து வந்தார்கள். லஜ்னா மற்றும் நாஸிராத் சிறுமிகளின் கல்வி மற்றும் தர்பிய்யத்திற்காகவும் பல்வேறு நிகழ்ச்சிகளை அன்னார் நடத்தி வந்தார்கள். அன்னார் பின் விட்டுச் சென்றவர்களில் அன்னாரின் கணவர் மட்டுமின்றி இரண்டு மகன்களும், இரண்டு மகள்களும் அடங்குவர். மர்ஹூமாவின் நான்கு பிள்ளைகளும் அல்லாஹ்வின் அருளினால் ஜமாஅத்தினுடைய சுறுசுறுப்பான அங்கத்தினர் ஆவர். மேலும் மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதற்கு நற்பேறு பெற்று வருகின்றனர். அல்லாஹ் மர்ஹூமாவுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அவர்களின் பிள்ளைகளையும் அன்னாரின் துஆக்கள் மற்றும் நன்மைகளுக்கு வாரிசுகளாக்குவானாக.

தமிழாக்கம்

மவ்லவி: A.அப்துர் ரஹ்மான் தாஹிர்

**128-வது காதியான் ஜல்ஸா-2023**

**ஸய்யிதுனா ஹுஸூர் அன்வர் அவர்கள் வருகிற டிசம்பர் 29,30,31** ஆகிய தேதிகளில் **128-வது காதியான் ஆண்டு மாநாட்டை** நடத்துவதற்கு ஒப்புதல் நல்கியுள்ளார்கள். ஜமாஅத் உறுப்பினர்கள் இந்த அருளுக்குரிய ஜல்ஸாவில் கலந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் தயாரிப்புகளை துவங்கிவிடுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த இறை மாநாட்டிலிருந்து பயன் பெறும் நற்பேறை வழங்குவானாக. மேலும், இந்த ஜல்ஸா எல்லா வகையிலும் வெற்றி பெறுவதற்காகவும், நற்பேறு பெற்ற ஆன்மாக்களின் நேர்வழிக்கு காரணியாக அமைவதற்காகவும் துஆ செய்து வாருங்கள்.

(நாஸிர் இஸ்லாஹ்-வ- இர்ஷாத் மர்களிய்யா-காதியான்)


**உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?**

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

**நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.**

KHAIRUL-ISLAM
JAYGON-WEST BENGAL 97348 44732

# ஜுமுஆ பேருரை

## பத்ர் போரின் ஒளியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய வாழ்க்கை வரலாறு

**இன்ன இன்ன நபர்களின் மகன்களே! இன்ன இன்ன நபர்களின் மகன்களே! உங்களுக்கு இந்த விஷயத்தால் மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளதா? நீங்கள் அல்லாஹ்விற்கும் அவனது தூதருக்கும் கட்டுப்பட்டிருக்க வேண்டுமே! ஏனெனில் எங்கள் இறைவன் எங்களிடம் செய்திருந்த வாக்குறுதியை நாங்கள் உண்மையானதாகக் கண்டு கொண்டோம். உங்கள் இறைவன் உங்களிடம் செய்த வாக்குறுதியை உண்மையானதாக நீங்கள் கண்டு கொண்டீர்களா? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்**

**இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எந்த இறைவனின் கையில் முஹம்மதின் உயிர் உள்ளதோ அந்த இறைவன் மீது ஆணையாக! நான் கூறுகின்ற இந்த விஷயங்களை (பத்ர் போரில் கொலையுண்ட) இவர்கள் உங்களை விட நன்றாக கேட்டுக் கொண்டிருக்கின்றனர்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 14 ஜுலை 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **வஃபா** மாதம் **14ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

**சென்ற இதழின் தொடர்ச்சி......**

உண்மை இதுவே ஆகும். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஈட்டுத் தொகை பெறுவதற்காக எடுத்த முடிவு என்பது முற்றிலும் இறைவனின் விருப்பத்திற்கு ஏற்புடையதாக இருந்தது. பொதுவான அறிவிப்புகளுக்கு ஏற்ப முன்னர் நான் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைக் குறித்து எடுத்துரைத்த போது இவற்றை எடுத்துரைத்து விட்டேன். இங்கும் அதனை எடுத்துரைப்பது அவசியம் ஆகும்.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அவர்கள் கைதிகளை பிடித்தபோது, அதாவது பதர் போர் சந்தர்ப்பத்தின் போது முஸ்லிம்கள் கைதிகளை சிறை பிடித்தனர். அப்போது , இந்தக் கைதிகளைக் குறித்து உங்களுடைய கருத்து என்ன? என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) ஆகியோரிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் நபி (ஸல்) அவர்களே! அவர்கள் நமது சிறிய தந்தையர் மற்றும் உறவினர்கள் ஆவர். என்னுடைய கருத்து என்னவென்றால் தாங்கள் (ஸல்) அவர்களிடம் இருந்து ஈட்டுத் தொகையை பெற்றுக் கொள்ளுங்கள். அது இந்த நிராகரிப்பாளர்களுக்கு எதிரான போரில் நமது வலிமைக்கு காரணியாக அமையும். மேலும், அவர்களுக்கு அல்லாஹ் இஸ்லாத்தின் பக்கம் வழிகாட்டுவதற்கும் வாய்ப்பு உள்ளது.

இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இப்னு கத்தாபே! உமது கருத்து என்ன? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் கேட்டார்கள்.

அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! கூடாது! அல்லாஹ்வின் மீது ஆணையாக! அபூபக்ர் அவர்களின் கருத்து என்னுடைய கருத்து அல்ல. மாறாக, என்னுடைய கருத்து என்னவென்றால், தாங்கள் அவர்களை எங்களிடம் ஒப்படைத்து விடுங்கள். நாங்கள் அவர்களின் கழுத்துகளை வெட்டி விடுவோம். நாங்கள் அவர்களை கொலை செய்ய வேண்டும்.

மேலும், அலீ அகீலுடைய கழுத்தை வெட்டுவதற்காக அவனை அலீயிடம் ஒப்படைத்து விடுங்கள். மேலும், இன்ன நபரின் கழுத்தை வெட்டுவதற்காக அவரை என்னிடம் ஒப்படைத்து விடுங்கள்.

அந்த நபரோ பரம்பரையின் அடிப்படையில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் உறவினராக இருந்தார். ஏனெனில், இவர்கள் அனைவரும் நிராகரிப்பாளர்களின் தலைவர்கள் ஆவர்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைத் தூதர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கருத்திற்கு முன்னுரிமை வழங்கினார்கள். மேலும், எனது கருத்திற்கு முன்னுரிமை வழங்கவில்லை. பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அடுத்த நாள் நான் சென்றேன். அப்போது இறைத் தூதர் (ஸல்) அவர்களும் அபூபக்ர் அவர்களும் அமர்ந்து அழுது கொண்டிருந்தார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எந்த விஷயம் தங்களையும் தங்களது தோழரையும் அழ வைத்துள்ளது? என்று எனக்கு கூறுங்கள். எனக்கு அழுகை வந்தால் நானும் அழுவேன். இல்லையென்றால், உங்கள் இருவரையும் போன்று அழுவதைப் போன்ற முகத்தை ஆக்கிக் கொள்வேன். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனது அழுகைக்கான காரணம் இதுவாகும். அதாவது, உமது தோழர்கள் எனக்கு முன்னால் அவர்களிடம் ஈட்டுத் தொகை பெறுவதற்கான ஆலோசனை வழங்கியிருந்தார்கள்; ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் இருந்த மரத்தைக் காட்டிலும் நெருக்கமாக அந்தக் கைதிகளின் தண்டனை முன் வைக்கப்பட்டுள்ளது. மேலும், அல்லாஹ் இந்த வசனத்தை இறக்கினான்.

مَا كَانَ لِنَبِيٍّ اَنْ يَّكُوْنَ لَهٗۤ اَسْرٰى حَتّٰى يُثْخِنَ فِى الْاَرْضِ

.(அல் அன்ஃபால்: 68)

அதாவது, நாட்டில் போர் செய்து இரத்தம் சிந்தாத வரை சிறை பிடிப்பதென்பது எந்த நபிக்கும் ஏற்றதல்ல. (நீங்கள் முறையான போரின்றி சிறைபிடிப்பீர்களாயின்) நீங்கள் உலகியல் பொருள்களைத் தேடக் கூடியவர்கள் ஆவீர்கள்.

பின்னர் அடுத்து இரண்டு வசனங்களைத் தாண்டி இவ்வாறு வருகின்றது:

فَكُلُوْا مِمَّا غَنِمْتُمْ حَلٰلًا طَيِّبًا

(அல் அன்ஃபால்: 70)

நபியே! உங்களுக்குப் போரில் கிடைக்கும் பொருள்களுள் (இறைக் கட்டளைக்கேற்ப) அனுமதிக்கப்பட்டதையும், தூய்மையானதையும் நீங்கள் உண்ணுங்கள்.

எனவே அல்லாஹ் அவர்களுக்கு போர் செல்வங்களை ஆகுமானதாக ஆக்கிவிட்டான். இது ஸஹீஹ் முஸ்லிமுடைய அறிவிப்பாகும். (ஸஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஜிஹாத் வஸ்ஸைர், ஹதீஸ் எண்: 4588)

இந்த ஹதீஸின் சொற்களில் உள்ள விஷயங்கள் இவையாகும். அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் அழுது கொண்டிருந்தார்கள். பின்னர், இடம் பெற்றுள்ள குர்பானி பற்றிய வசனங்கள், அவற்றில் எடுத்துரைத்துக்கப்பட்டுள்ள கருத்து ஆகியவை இந்த அறிவிப்பை சந்தேகத்திற்குரியதாக ஆக்கி விடுகின்றது. என்ன கூறப்படுகின்றது? என்பது தெரியவில்லை. விஷயம் தெளிவாக புரிவதில்லை.

எவ்வாறு இருப்பினும், இந்த அறிவிப்பை சரியானதாக கருதி பெரும்பாலான வரலாற்று நூல்களும், விரிவுரையாளர்களும் இந்த கருத்தை எடுத்துரைத்துள்ளனர். அதாவது அல்லாஹ் பத்ர் போர் கைதிகளிடம் இருந்து ஈட்டுத் தொகை பெற வேண்டும் என்ற முடிவின் மீது அதிருப்தியை வெளிப்படுத்தினான்; மேலும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கருத்தை விரும்பினான் என்று அவர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் வாழ்க்கை வரலாறை எழுதக் கூடியவர்கள் தனித் தலைப்பை உருவாக்கியுள்ளனர்; அதாவது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கருத்தைப் பற்றி எந்த எந்த திருக்குர்ஆன் கட்டளைகள் இறங்கியுள்ளன என்று ஒரு பட்டியல் தயாரித்துள்ளனர். அதில் பத்ர் போர் கைதிகள் தொடர்பாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கருத்தை அல்லாஹ் விரும்பினான் என்று இந்த விஷயத்தையும் பதிவு செய்துள்ளனர். ஆனால், இது சந்தேகத்திற்குரிய விஷயம் ஆகும். அதில் எதுவும் புரியவில்லை. வாழ்க்கை வரலாற்று ஆசிரியர்களுக்கும், விரிவுரையாளர்களுக்கும் அதனை புரிவதில் தவறு ஏற்பட்டுள்ளது.

எவ்வாறு இருப்பினும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இதனை விரிவாக எடுத்துரைத்துள்ளார்கள்: அது

அன்னாருடைய அச்சில் வராத தஃப்ஸீர் குறிப்புகளில் கிடைத்துள்ளது. அது இந்த விஷயத்தை விளக்குகின்றது. மேலும் அந்த அறிவிப்புகளை ரத்து செய்கின்றது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் விளக்கமே சரியானதாக தெரிய வருகின்றது. தேவையின்றி ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அந்தஸ்தை உயர்த்திக் காட்டுவதற்காக சில விரிவுரையாளர்கள் இந்த அறிவிப்பை உருவாக்கிக் கொண்டுள்ளனர். அல்லது அது தவறாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளது.

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் சூரா அன்ஃபாலுடைய வசனம் 68-க்கு விளக்கமளித்தவாறு கூறுகின்றார்கள்: இஸ்லாத்திற்கு முன்னர் அரேபியர்களிடம் இந்த வழக்கம் இருந்தது. மேலும், எழுதுகின்றார்கள்: வேதனை என்னவென்றால் உலகின் சில பகுதிகளில் தற்போது வரை இந்த வழக்கம் இருந்து வருகின்றது. போர் நடைபெறவில்லையென்றாலும் கூட அந்நிலையிலும் கைதிகளாக (மக்களை) சிறைபிடிக்கின்றனர். மேலும், அவர்களை அடிமைகளாக்கிக் கொள்கின்றனர்.

இது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் அந்தக் குறிப்பை எழுதிய காலத்தில் இருந்த விஷயமாகும்.

இந்த வசனம் அந்த மோசமான சடங்கை ரத்து செய்கின்றது. மேலும், தெளிவான சொற்களில் இவ்வாறு கட்டளை வழங்குகின்றது. அதாவது,போரின் நிலையிலும், மேலும் போருக்குப் பிறகும் மட்டுமே எதிரியின் ஆட்களை கைதிகளாக ஆக்கிக் கொள்ள முடியும். போர் நிகழவில்லையென்றால் பின்னர் எந்த ஒரு நபரையும் கைதியாக சிறைபிடிப்பது ஆகுமானதல்ல. இந்த வசனத்திற்கு மிகவும் தவறான விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

கூறுகின்றார்கள்: முஸ்லிம்கள் பத்ர் போர் சந்தர்ப்பத்தின்போது மக்கா வாசிகளைச் சேர்ந்த சிலரை கைதிகளாக சிறைபிடித்து விட்டனர். அப்போது, அவர்கள் தொடர்பாக என்ன முடிவு எடுக்க வேண்டும்? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளிடம் ஆலோசனை செய்தார்கள். அவர்களை கொலை செய்து விட வேண்டும் என்பது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கருத்தாக இருந்தது. அந்தக் கைதிகளிடம் இருந்து ஈட்டுத் தொகை பெற்று அவர்களை விடுதலை செய்து விட வேண்டும் என்பது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கருத்தாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கருத்தை விரும்பினார்கள். மேலும், இது சூரா அன்ஃபாலுடைய 68-வது வசனமாகும். அதில் இவ்வாறு உள்ளது: நாட்டில் போர் செய்து இரத்தம் சிந்தாத வரை சிறை பிடிப்பதென்பது எந்த நபிக்கும் ஏற்றதல்ல.

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இதற்கு விளக்கமளித்தவாறு கூறுகின்றார்கள்: பெறப்பட்ட கருத்துகளில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கருத்து வேறொன்றாக இருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கருத்து வேறொன்றாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கருத்தை விரும்பினார்கள். மேலும் ஈட்டுத் தொகை பெற்றுக் கொண்டு கைதிகளை விடுதலை செய்து விட்டார்கள்.

ஆனால், திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் கூறுகின்றார்கள்: இந்த வசனம் இறங்கியபோது, அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் செயலில் அதிருப்தி கொண்டான் (நவூதுபில்லாஹ்). இதன் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்தஸ்திற்கு இழுக்கு ஏற்பட்டாலும் சரியே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கூற்றிற்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும் என்று இந்த அறிவிப்பு உருவாக்கப்பட்டுள்ளது. எவ்வாறு இருப்பினும், இவர்கள் கூறுகின்றனர்: அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் செயலில் அதிருப்தி கொண்டான். கைதிகளை கொலை செய்திருக்க வேண்டும். மேலும், ஈட்டுத் தொகை பெற்றிருக்கக் கூடாது என்பது தபரியின் தஃப்ஸீர் ஆகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்: இந்த தஃப்ஸீர் தவறானதாகும். முதல் விஷயம், அந்த நேரம் வரை கைதிகளிடமிருந்து ஈட்டுத் தொகை பெற்றுக் கொண்டு அவர்களை விடுவிக்கக் கூடாது என்று எந்த இறைக் கட்டளையும் இறங்கியிருக்கவில்லை. எனவே, ஈட்டுத் தொகையை ஒப்புக் கொண்டதனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது எந்த ஆட்சேபனையையும் சுமத்த முடியாது. இரண்டாவது, அதற்கு முன்னர் நக்லா என்ற இடத்தில் ஈட்டுத் தொகை பெற்றுக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரு நபர்களை விடுதலை செய்திருந்தார்கள். மேலும், இறைவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த செயலின் மீது எந்த அதிருப்தியும் கொள்ளவில்லை. மூன்றாவது, வெறும் இரண்டு வசனங்களுக்கு பிறகு,போர் செல்வங்களாக உமக்கு எவையெல்லாம் கிடைக்குமோ அவற்றை உண்ணுங்கள்; அவை ஹலால் ஆனதும், தூய்மையானதும் ஆகும் என்று இறைவன் முஸ்லிம்களுக்கு அனுமதி வழங்குகின்றான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஈட்டுத் தொகை பெற்றதில் இறைவன் அதிருப்தி கொண்டான் என்ற விஷயம் எவருடைய கற்பனையிலும் கூட வர முடியாது. இவ்வாறு என்ன பணம் கிடைத்தனவோ அவற்றை ஹலால் என்றும் , தூய்மையானவை என்றும் இறைவன் கூறிவிட்டான். எனவே இந்த விளக்கமே தவறானது ஆகும். மேலும், சரியான விளக்கம் இதுவே ஆகும். அதாவது, இந்த வசனத்தில் ஒரு விதிமுறை வகுக்கப்பட்டுள்ளது; அதாவது முறையாக போர் நிகழும் பட்சத்திலும் எதிரிகள் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டு அவர்கள் தோற்கடிக்கப்பட்ட நிலையிலும் மட்டுமே எதிர் தரப்பு நபர்களை கைதிகளாக சிறைபிடிக்க முடியும். (தர்ஸ் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள்( அச்சில் வெளியிடப்படாதது). சூரா அன்ஃபால், ரிஜிஸ்டர் எண்: 36, பக்கம் 968 - 969)

ஈட்டுத் தொகை பெறக் கூடாது என்ற ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கூற்றுடன் இதற்கு எந்த தொடர்பும் கிடையாது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எடுத்துரைத்துள்ள இந்தக் கருத்தையே திருக்குர்ஆன் விரிவுரையாளர்களில் அல்லாமா ராஸி (ரஹ்) அவர்களும், பிரபலமான வாழ்க்கை வரலாற்று ஆசிரியர் அல்லாமா ஷிப்லீ நுஃமானீ அவர்களும் எடுத்துரைத்துள்ளனர். (அல்லாமா இமாம் ராஸி அவர்களின் தஃப்ஸீரே கபீர் - தொகுதி 8, பக்கம் 15, தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத் பதிப்பு, 2004-ம் ஆண்டு) ( ஷிப்லீ நுஃமானீ அவர்களின் நூல் -ஸீரத்துன்னபீ (ஸல்) அவர்கள், தொகுதி 1, பக்கம் 184)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் (ரலி) அவர்களும் இது தொடர்பாக எழுதியுள்ளார்கள்: மதீனா சென்றடைந்து கைதிகள் தொடர்பாக அவர்களை என்ன செய்ய வேண்டும்? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) ஆலோசனை செய்தார்கள். அரேபியாவில் பொதுவாக கைதிகளை கொலை செய்வதற்கு அல்லது நிரந்தரமாக அவர்களை அடிமைகளாக்கிக் கொள்வதற்கும் சட்டம் நடைமுறையில் இருந்தது. ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது இயல்பின் காரணமாக இந்த விஷயத்தை மிகவும் வெறுத்தார்கள். அவ்வாறு இருந்தபோதிலும் அது தொடர்பாக எந்த ஒரு இறைக் கட்டளையும் இறங்கியிருக்கவில்லை. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: எனது கருத்தின் படி அவர்களிடம் இருந்து ஈட்டுத் தொகை பெற்றுக் கொண்டு அவர்களை விடுதலை செய்து விட வேண்டும். ஏனெனில், இறுதியில் இந்த மக்களோ நம்முடைய சகோதரர்களே ஆவார்கள். மேலும், நாளை இவர்களிலிருந்தே இஸ்லாத்திற்காக தங்களை மாய்த்துக் கொள்ளக்கூடியவர்கள் உருவாகிவிடுவதில் என்ன ஆச்சரியம் இருக்க முடியும்?

ஆனால், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இந்தக் கருத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள். மேலும், மார்க்க விவகாரத்தில் எந்த உறவையும் கருத்தில் கொள்ளக் கூடாது. மேலும் இந்த மக்கள் தங்களின் செயல்களின் காரணமாகவே கொலை செய்யப்படுவதற்கு தகுதியானவர்களாக இருக்கின்றனர். எனவே எனது கருத்தின்படி இவர்கள் அனைவரும் கொலை செய்யப்பட வேண்டும்; இன்னும் கூறப்போனால், முஸ்லிம்கள் தத்தமது கைகளால் தங்களது உறவினர்களை கொலை செய்ய வேண்டும் என கட்டளையிடப்பட வேண்டும் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது கருணை மிகுந்த இயல்பினால் தாக்கத்திற்கு ஆளாகி ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கருத்தை விரும்பினார்கள். மேலும், கொலை செய்யப்பட வேண்டும் என்ற கருத்திற்கு எதிராக முடிவு எடுத்தார்கள். மேலும், எந்த இணை வைப்பாளர்கள் ஈட்டுத் தொகை போன்றவற்றை செலுத்தி விடுவார்களோ அவர்களை விடுதலை செய்துவிட வேண்டும் என்று கட்டளை வழங்கினார்கள். ஆக, பின்னர் இதற்கு ஏற்பவே இறைக் கட்டளை இறங்கியது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எழுதியது போன்றும் ஈட்டுத் தொகை கொடுப்பது தொடர்பாக இறைக் கட்டளையும் இறங்கி விட்ட பின்னரும் ஹதீஸை அடிப்படையாகக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆகியோர் அழுததற்கு காரணத்தை உருவாக்குவது விநோதமாக இருக்கின்றது.

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்: ஆக, ஒவ்வொரு நபரின் தகுதிக்கேற்ப ஓராயிரம் திர்ஹம் முதல்

நான்காயிரம் திர்ஹம் வரை அவருக்கான ஈட்டுத் தொகை நிர்ணயம் செய்யப்பட்டது. இவ்வாறு அனைத்து கைதிகளும் விடுதலை செய்யப்பட்டுக் கொண்டே சென்றார்கள். (ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்களின் நூல் - ஸீரத் காத்தமுன்னபிய்யீன், பக்கம் 367 -368)

மீதமுள்ள விஷயங்கள் எதிர் வரும் நாட்களில் (எடுத்துரைக்கப்படும்). இன்ஷா அல்லாஹ்.

ஜுமுஆவிற்கு பிறகு நான் இரண்டு காயிப் ஜனாஸா தொழுகைகளையும் தொழ வைப்பேன். முதலாவது ஜனாஸா அப்துல் ஹமீது கான் ஸாஹிப் காட்கஷ அவர்களுடையதாகும். ஜமாஅத்தின் முரப்பியாக இருந்தார்கள். மேலும், பாகிஸ்தானில் வக்ஃபே ஜதீத் நாஸிம் மால் என்ற பொறுப்பில் அன்னார் இருந்தார்கள். கடந்த நாட்களில் 70-வது வயதில் அன்னார் மரணமடைந்து விட்டார்கள்.

اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

அல்லாஹ்வின் அருளினால் அன்னார் வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். அன்னாருடைய தந்தையின் பெயர் சவ்த்ரி அப்துல் லத்தீஃப் கான் ஸாஹிப் காட்கஷ ஆகும். தாயார் பெயர் அமத்துல் லத்தீஃப் ஸாஹிபா ஆவார்கள். அன்னாரின் தந்தையாரும் வாழ்வை அர்ப்பணித்தவராக இருந்தார்கள். ஜமாஅத்தின் ஊழியராக இருந்தார்கள். அப்துல் ஹமீத் கான் ஸாஹிப் காட்கஷ அவர்களின் குடும்பத்தில் அன்னாரின் தந்தை வழிப் பாட்டனாரான ஹஸ்ரத் சவ்த்ரி அப்துல் மன்னான் கான் ஸாஹிப் காட்கஷ மற்றும் தந்தை வழிப் பாட்டனாரின் சகோதரர் ஹஸ்ரத் சவ்த்ரி அப்துஸ் ஸலாம் கான் ஸாஹிப் காட்கஷ ஆகியோரின் மூலமாக அஹ்மதிய்யத் தோன்றியது. இந்த சான்றோர்கள் 1903-ம் ஆண்டு டிசம்பரில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கரங்களில் பைஅத் செய்யும் நற்பேறு பெற்றார்கள். மேலும், அப்துல் ஹமீத் கான் ஸாஹிப் காட்கஷ அவர்கள் 1979-ல் மே மாதம் முரப்பியாக தமது சேவையை துவங்கினார்கள். மேலும் பல்வேறு இடங்களில் அன்னாருக்கு தொண்டாற்றும் நற்பேறு கிடைத்தது. பாகிஸ்தானிலும், வெளி நாடுகளிலும் தொண்டாற்றும் நற்பேறு கிடைத்தது. வகாலத் தப்ஷீர் துறையின் கீழ் 1985 ஆகஸ்ட் முதல் டிசம்பர் 1986 வரை உகாண்டாவில் அன்னார் இருந்தார்கள். பின்னர் நஸாமத் இர்ஷாத் வக்ஃபே ஜதீத் துறையின் கீழ் பல்வேறு இடங்களில் முரப்பியாக தொண்டாற்றும் நற்பேறு அன்னாருக்கு கிடைத்தது. பின்னர், 1993-ல் நாயிப் நாஸிம் வக்ஃபே ஜதீத் என்ற பொறுப்பில் நான் அன்னாரை நியமித்தேன். அந்த பொறுப்பில் அன்னார் மரணம் வரை தொண்டாற்றி வந்தார்கள். நாற்பத்தி நான்கு (44) வருடங்கள் வரை அன்னார் ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதற்கு நற்பேறு பெற்றார்கள். அன்னாருக்கு அல்லாஹ் ஒரு மகனையும், ஒரு மகளையும் வழங்கினான். அன்னாருடைய மகன் டாக்டர் அப்துர் ரஊஃப் கான் ஸாஹிப் இன்றைய நாட்களில் டென்டார்க்கில் சத்ர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவாக இருக்கின்றார்கள்.

டாக்டர் ரஊஃப் கான் ஸாஹிப் கூறுகின்றார்கள்: (எனது) தந்தையார் எப்போதும் தான் செய்த வக்ஃபிற்கு நன்றியுணர்வுடன் இருந்தார்கள். உகாண்டாவில் அன்னார் இருந்தபோது, அங்கு கிளர்ச்சியாளர்கள் ஆட்சியை கவிழ்த்து விட்டனர். மேலும் வெளிநாட்டவர்களை நாட்டிலிருந்து வெளியேற்றி விட்டனர். இது அன்னார் அங்கிருந்து விரைவாக திரும்புவதற்கு காரணமாக இருந்தது. எவ்வாறு இருப்பினும், அவர் கூறுகின்றார்: உகாண்டாவில் தொண்டாற்றி வந்தபோது, அங்கிருந்த மிஷனரி இன்சார்ஜ் மஹ்மூத் பி.டி ஸாஹிப் அவர்கள் எனது தந்தையாரிடம் திருக்குர்ஆன் கொடுத்து கம்பாலா என்ற இடத்திற்கு தப்லீஃக் பணிக்காக அனுப்பி வைத்தார்கள். இதற்கிடையில், அந்தப் பகுதியில் உள்நாட்டுப் போர் துவங்கி விட்டது. மக்கள் இடம் பெயர்ந்து செல்லும் கட்டாயத்திற்கு ஆளாகி விட்டனர்.

கூறுகின்றார்: இவ்வாறு இடம் பெயரும் போது எனது தந்தையார் நோய்வாய்பட்டு விட்டார்கள்.

மேலும், அருகில் மருத்துவ மனை இல்லாத காரணத்தினாலும், மருத்து உதவிகள் கிடைக்காத காரணத்தினாலும் மக்கள் அன்னாரின் தந்தையாரை அங்கேயே ஓர் அறையில் விட்டு விட்டுச் சென்று விட்டார்கள். அந்த பகுதியினை கிளர்ச்சியாளர்கள் முற்றுகையிட்டு விட்டனர். மேலும், இங்கு யாராவது இருக்கின்றனரா? என்று கிளர்ச்சியாளர்கள் தேடுதல் வேட்டை நடத்தினர். இதற்கிடையில் ஹமீத் ஸாஹிப் இருந்த அந்த அறை வரை ஒரு கிளர்ச்சியாளர் வந்தார். அப்போது அன்னார் படுத்திருந்தார்கள். எனவே எனது தந்தையை மரணித்து விட்டதாகக் கருதி அவர் விட்டு விட்டு சென்று விட்டார்.

கூறுகின்றார்கள்: நான் முற்றிலும் ஜன்னலையொட்டி கீழே படுத்திருந்தேன்: மேலும், ஜன்னல் வழியாக குண்டுகள் வந்து கொண்டிருந்தன. மேலும், அவை எதிரே இருந்த சுவரில் சென்று விழுந்து வந்தன. அதன் பிறகு ஓரளவிற்கு நிலைமைகள் சீராகின. அப்போது நான் அறிந்த சில மக்களுடன் தொடர்பு ஏற்பட்டது என்று எனது தந்தையார் கூறி வந்தார்கள். மேலும் அவர்கள் எனது தந்தையாரை பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு சென்றார்கள். மேலும், இவ்வாறு அல்லாஹ் அன்னாரை பாதுகாத்தான்.

கிலாஃபத்துடனும் அன்னாருக்கு எல்லையற்ற பற்றும், அன்பும், நேசமும் மிக்க தொடர்பு இருந்தது. மிகவும் எளிமையானவராகவும், எல்லாரையும் மனமகிழ்ச்சியுடன் சந்திக்கக் கூடியவராகவும் மர்ஹூம் இருந்தார்கள். காலத்தின் கலீஃபாவின் குத்பாக்களில் என்னவெல்லாம் கூறப்பட்டனவோ அன்னார் அவற்றின் ஒவ்வொரு விஷயத்திற்கும் கட்டுப்பட்டு நடந்து வந்தார்கள். எந்தவொரு சுய விளக்கத்தையும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். மேலும், அதற்கு இன்ன பொருள் ஆகும்; அல்லது அதன் நோக்கம் இதுவாகும் என்று எவராவது விளக்கம் கொடுத்தால் அன்னார் மிகவும் அதிருப்தி அடைந்து வந்தார்கள். பின்னர், பொறுப்பாளர்கள் மற்றும் ஜமாஅத் முரப்பிமார்களுக்கு தானும் மரியாதை வழங்கி வந்தார்கள்.

அன்னாரின் மகன் கூறுகின்றார்: எனக்கும் அதற்கு அறிவுறுத்தி வந்தார்கள். கூறுகின்றார்கள்: நான் அத்ஃபாலுல் அஹ்மதிய்யாவின அமைப்பில் இருந்தபோது ஒரு முறை என்னிடம், நீ பொறுப்பாளர்கள் மற்றும் முன்தஸிம் அத்ஃபாலுடைய பேச்சை கேட்க மாட்டாய் என்றால் பின்னர் பொறுப்பிலிருந்து விலகி விடு.

ஏதாவது ஒரு விஷயத்தில் கருத்து வேறுபாடு ஏற்பட்டிருக்கும்.

அன்னார் தொடர்ந்து கூறிவந்தார்கள்: ஜமாஅத் அமைப்பும், கிலாஃபத்தும் ஒன்றுடன் ஒன்று இணைந்துள்ளது. ஒன்றின் கூற்றை கேட்பதும் மற்றொன்றின் கூற்றை ஏற்காமல் இருப்பதும் சரியானதல்ல.

பிறருக்கு உதவி செய்வது, மேலும் உரிய சந்தர்ப்பத்தில் சீர்திருத்தம் செய்வது, அன்னாருடைய சிறப்புப் பண்பாக இருந்தது. எந்த அளவிற்கு என்றால், அன்னார் ஒரு விஷயத்தை சீர்திருத்தம் செய்து அதனால் எவராவது அதிருப்தி அடைந்துவிட்டால் அன்னார் அதனை பொருட்படுத்த மாட்டார்கள். சீர்திருத்தம் ஏற்பட்டு விட்டால் பின்னர் அன்னார் அந்த நபருக்கு ஊக்கம் அளிப்பார்கள். மேலும், எனது நோக்கம் சீர்திருத்தம் செய்வது மட்டுமே ஆகும் என்று அன்னார் கூறுவார்கள்.

எழுதுகின்றார்கள்: வாழ்க்கையில் வசதி வாய்ப்பை அதிகரித்துக் கொள்வதற்கான பல சந்தர்ப்பங்கள் வந்தன. ஆனால், அன்னார் எப்போதும் வக்ஃபிற்கே முன்னுரிமை வழங்கி வந்தார்கள். கடைசி வயதில் கூறுகின்றார்கள்:

நானும் எனது தந்தையாரிடம் பேச்சுகளுக்கு இடை இடையே நீங்கள் என்னிடம் டென்மார்க்கிற்கு வந்து விடுங்கள் என்று கூறினேன். அப்போது அன்னார் மிகவும் கோபமுற்றார்கள். மேலும், அன்னார் கூறினார்கள்: நான் வருடங்களை வக்ஃப் செய்யவில்லை. வாழ்வை வக்ஃப் செய்துள்ளேன். மேலும், எனது அனைத்து விஷயங்களும் வக்ஃப் உடன் மட்டுமே தொடர்புடையவையாக உள்ளன.

அன்னாரின் மகள் ஹாஃபிழா ஹஸன் ஆரா கூறுகின்றார்கள்: எனது தந்தையார் மிகவும் கருணை கொண்டவராகவும், பரிவு மிக்கவராகவும், விருந்து உபசரிப்பு செய்யக் கூடியவராகவும், இறையச்சம் கொண்டவராகவும் இருந்தார்கள். மேலும் துஆக்களின் ஒரு கருவூலமாக இருந்தார்கள். அன்னாருடைய ஒரு சிறப்பான பண்பு என்னவென்றால், அன்னாருக்கு இறைவனின் இருப்பின் மீது முழுமையான நம்பிக்கையும், உறுதியும் இருந்தது. மேலும், அதன் பிறகு கிலாஃபத்தின் மீது அன்னார் கொண்டிருந்த அன்பு அன்னாரின் ஒரு சிறப்பு பண்பாக இருந்தது. கிலாஃபத்துடன் எல்லா உறவுகளையும் கடந்து ஒரு சிறப்பான அன்பிற்கான வடிவம் இருந்தது. எப்போதும் அன்னாரின் சிந்தனை ஓட்டத்திலும், பேச்சின் ஆரம்பமும், முடிவும் கிலாஃபத் மற்றும் காலத்தின் கலீஃபாவிடம் நேசம் கொள்ள வேண்டும் என்பதாகவே அமைந்திருந்தது.

அன்னாரின் மகள் கூறுகின்றார்கள்: இங்கு யூ.கேவிற்கு வரும்போதெல்லாம், நான் சிலமுறை உணர்ச்சிவயப்பட்டு எனது தந்தையின் மீதான அன்பை வெளிப்படுத்தி வந்தேன். அப்போது அன்னார் இவ்வாறு கூறிவந்தார்கள்: உலகின் அனைத்து உறவுகளும் அழியக் கூடியவை ஆகும். நீ இறைவனிடம் மட்டும் வலுவான தொடர்பு வைப்பாயாக. மற்ற அனைத்து உறவுகளும் விட்டுவிட்டுச் சென்றுவிடும். ஏனெனில், என்றென்றும் நிலைபெறக் கூடிய இருப்பு இறைவனின் இருப்பு மட்டுமே ஆகும். அந்த இறைவன் ஒருபோதும் உன்னை தனித்து

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 31 August 2023 Issue No. 35

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

விட்டு விடமாட்டான். அதன் பின்னர் அன்னார் கூறினார்கள்: கிலாஃபத்துடன் நீ உறுதியான தொடர்பு வைத்துக் கொள்!

மிகவும் எளிய இயல்பைக் கொண்ட மனிதராக இருந்தார்கள். நான் ஒரு வாழ்வை அர்ப்பணித்த நபர் ஆவேன்; நான் எனது முழு வாழ்வையும் அர்ப்பணம் செய்துள்ளேன் என்றே எப்போதும் கூறிவந்தார்கள். மேலும், இறுதி வரை வக்ஃபை நான் பேணி நடக்க வேண்டும் என்ற தமது விருப்பத்தையும் அன்னார் வெளிப்படுத்தி வந்தார்கள்.

நாஸிம் மால் வக்ஃபே ஜதீத் ஹாஃபிழ் காலித் இஃப்திகார் ஸாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: ஹமீதுல்லாஹ் கான் ஸாஹிப் அவர்களுடன் சுமார் 20 வருடங்கள் பணி செய்வதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. மேலும், எப்போதும் அன்னாரின் நடத்தை ஓர் உண்மையான வாழ்வை அர்ப்பணித்தவரின் நடத்தையாகவே இருந்து வந்துள்ளது. வயது மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் என்னை விட அன்னார் பெரியவர் ஆவார்கள். ஆனால் கிலாஃபத்திற்கு கட்டுப்படுதல் மற்றும் ஜமாஅத் அமைப்பிற்கு கட்டுப்படுதலில் மிகவும் உச்சபட்ச பேணுதலின் காரணமாக ஒருபோதும் தனது (Seniority) வயது மூப்பின் உணர்வை எனக்கு ஏற்படுத்தியதில்லை.

மர்ஹூம் அன்னாருக்கு நாயிப் ஆக (துணை பொறுப்பில்) இருந்தார்கள்.

கூறுகின்றார்கள்: தன்னலமற்றவராக மர்ஹூம் என்னுடன் பணியாற்றினார்கள். மர்ஹூமுடைய புரிய வைக்கும் விதமும், சந்தா கொடுக்கும்படி அன்னார் அறிவுறுத்துகின்ற தொனியும் மிகவும் அழகியதாக இருந்தது. புதிதாக வரக்கூடிய ஊழியர்கள், முரப்பிமார்கள் மற்றும் முஅல்லிம் மார்களுக்கு நுட்பமான ஞானத்துடன் பணி செய்கின்ற விதத்தை புரிய வைத்து வந்தார்கள். தமது கடமைகளை முழுமையான கீழ்படிதலுடன் அன்னார் ஆற்றி வந்தார்கள். அன்னார் சிறந்த கருத்து கூறுபவராக இருந்தார்கள். தொண்டாற்றும் விதம் மௌனமானதாகவும், தன்னலமற்றதாகவும் இருந்தாலும் 30 வருடங்களுக்கும் கூடுதலாக வக்ஃபே ஜதீத் அன்னாரிடம் இருந்து பயனடைந்து வந்துள்ளது. கடைசி சில வருடங்களில் சில நேரங்களில் அன்னாருடைய உடல் நலம் பாதிப்புக்குள்ளாகி வந்தது. பிள்ளைகள் வெளிநாட்டில் இருந்தனர். ஏதாவது ஒரு பிள்ளையிடம் வெளிநாட்டிற்கு சென்று விடுங்கள் என்று எவராவது கூறிவிட்டால் பின்னர் மிகவும் உணர்ச்சிவயப்பட்டு இவ்வாறு பதில் அளிப்பார்கள்: நான் எனது வாழ்வை அர்ப்பணித்துள்ளேன். மேலும் நான் இறுதி வரை தொண்டாற்றுவேன்.

அன்னார் இந்த உடன்படிக்கையை இறுதி வரை நிறைவேற்றுவதற்கு அல்லாஹ் அன்னாருக்கு நற்பேறும் வழங்கினான்.

நஸாமத்தே மால் துறையில் பணியாற்றி வரும் ஜமாஅத்தின் முரப்பி முபஷ்ஷிர் அஹ்மத் ஸாஹிப் எழுதுகின்றார்கள்: 2013-ம் ஆண்டு வக்ஃபே ஜதீத் துறையில் நான் பணியமர்த்தப்பட்டேன். அப்துல் ஹமீது கான் ஸாஹிப் அவர்கள் இந்த அடிப்படையான இரண்டு அறிவுரைகளை வழங்கினார்கள். இந்த இரண்டையும் உங்களது நோட்டில் எழுதி வைத்துக் கொள்ளுங்கள் என்று என்னிடம் கூறினார்கள்: முதலாவது, அனைத்து அருட்களின் ஊற்று கிலாஃபத் ஆகும். எல்லா நிலையிலும் கிலாஃபத்துடன் நன்றியுணர்வுடன் இருக்க வேண்டும். இரண்டாவது, பணியில் சோம்பல் ஏற்பட்டு விட்டால் அது மன்னிக்கப்படக் கூடும். ஆனால், தவறான கூற்று மற்றும் பொய் ஒருபோதும் மன்னிக்கப்பட மாட்டாது.ஒருபோதும் தவறான விஷயத்தை கூறக் கூடாது. மேலும் பொய் பேசவும் கூடாது. இந்த இரண்டு விதிமுறைகளை தீர்க்கமாக கவனத்தில் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். இவை முற்றிலும் சிறப்பானவையே ஆகும். அல்லாஹ்விடம் எப்போதும் உதவி தேடியவாறும் துஆ செய்தவாறும் இருக்க வேண்டும் என்பதில் நம்மில் ஒவ்வொருவருடைய ஈமானும், உறுதியும் இருக்கின்றது.

எவ்வாறு இருப்பினும் கூறுகின்றார்கள்: சுற்றுப் பயணங்களின் போது நான் அன்னாருடன் இருந்துள்ளேன். சந்தா கொடுப்பதற்கு அறிவுறுத்தும் போது வக்ஃபே ஜதீதுடைய முக்கியத்துவம் மற்றும் அவசியம் தொடர்பாக ஒரு நபருக்கு எந்த அளவிற்கு தெளிவுபடுத்த வேண்டும் என்றால் அவருக்கு தியாகம் செய்வதற்கு எந்த தயக்கமும் இருக்கக் கூடாது என்று மீண்டும் மீண்டும் எனக்கு வலியுறுத்தி வருவார்கள்.

வெறும் பைசா மட்டுமே கேட்கக் கூடாது. மாறாக, சந்தாவின் முக்கியத்துவத்தை அவரது உள்ளத்தில் ஏற்படுத்த வேண்டும். ஜமாஅத்தின் மீதான நேசத்தை, வலியை அவரது உள்ளத்தில் ஏற்படுத்த வேண்டும். பின்னர் அவரது தகுதிக்கேற்ப அவரிடம் சந்தா கேட்க வேண்டும். பின்னர் எவ்வகையிலும் வெட்கப்படுவதற்கு அவசியம் இல்லை. ஏனெனில், நமது பணி ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதும், ஜமாஅத்திற்கு உதவி செய்வதும் ஆகும். அடுத்து, அன்னார் ஜமாஅத் சொத்துகளை கருத்தில் கொண்டு வந்தார்கள். சந்தா ஜமாஅத் உறுப்பினர்களின் தியாகத்தின் விளைவாக ஒன்று திரட்டப்படுகின்றன: இந்த சந்தாக்களை செலவு செய்வதில், நாம் வரம்பு மீறி செயல்படக் கூடாது; என்ன தேவையோ அதனை பெற்றுக் கொள்ளுங்கள். ஆயினும் தேவைக்கு அதிகமாக செலவு செய்யாதீர்கள் என்று எங்களுக்கு வலியுறுத்தி வருவார்கள்.

மேலும் கூறிவந்தார்கள்: நான் எனது மகனிடமும் கூறியுள்ளேன்: நீ எதுவரை ஜமாஅத்திற்கு நன்றியுடையவனாக இருப்பாயோ அதுவரை நீ எனது மகன் ஆவாய். மற்றபடி எனக்கு உன்னிடம் வேறு எந்த தொடர்போ அல்லது கோரிக்கையோ கிடையாது.

அல்லாஹ் அன்னாருடன் பாவ மன்னிப்புடனும், கருணையுடனும் நடந்து கொள்வானாக. அந்தஸ்துகளை உயர்த்துவானாக. அன்னாருடைய நன்மைகளையும் அன்னாரின் பிள்ளைகளிடத்தில் அல்லாஹ் நிலைபெறச் செய்வானாக.

அடுத்து இடம் பெற இருக்கும் நற்குறிப்பும், ஜனாஸாவும் அமெரிக்காவில் ஜமாஅத்தின் முரப்பியாக இருக்கின்ற மதிப்பிற்குரிய முபஷ்ஷிர் அஹ்மத் ஸாஹிப் அவர்களின் துணைவியார் நுஸ்ரத் ஜஹான் ஸாஹிபா அவர்களுடையது ஆகும். கடந்த நாட்களில் அன்னார் மரணமடைந்து விட்டார்கள்.

اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْنَ

மர்ஹூமா தமது கணவர் மதிப்பிற்குரிய முபஷ்ஷிர் அஹ்மது ஸாஹிப் மற்றும் மூன்று குழந்தைகளுடன் 1972-ம் ஆண்டு அமெரிக்காவிற்கு இடம் பெயர்ந்தார்கள். வாஷிங்டனில் வசிக்கத் துவங்கினார்கள். 1988-ல் அமெரிக்காவில் அன்னாருடைய கணவருக்கு வாழ்வை அர்ப்பணிப்பதற்கு நற்பேறு கிடைத்தது. மேலும், மர்ஹூமா வாழ்நாள் முழுவதும் மிகவும் எளிமையுடனும், நன்றியுணர்வுடனும் கழித்தார்கள். அன்னாருடைய கணவர் முபஷ்ஷிர் அஹ்மத் ஸாஹிப் வக்ஃப் செய்தார்கள். அந்த நேரத்திலிருந்தே அன்னார் முரப்பியாக பணி செய்து கொண்டிருக்கின்றார்கள். மிகவும் எளிமையாகவும்,

இதன் தொடர்ச்சி - 8ம் பக்கம்...

**National Watch Company**
Sales & Service



B. Mohamed Adil
93632 06679
99433 38000

196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad